பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு2030 மார்கழி 21 புதன்கிழமை (05-01-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:35

## சந்திரிகாவையும் ரணிலையும் சர்வமதக்குழு சந்திக்கும்

அரசாங்கத்துக்கும் - விடுதலைப்புலிகளுக்கும்இடையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்முயற்சியாக ஜனாதிபதியையும்எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்திக்க சர்வமதக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. விடுதலைப்புலிகள் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவதற்கு முன்னர்அரசினதும் எதிர்கட்சியினதும் நிலைப்பாடுகளை அறியவேண்டியுள்ளது என்றும் -

அதற்காக அவர்களைச் சந்திக்க நேரம் ஒதுக்கித் தருமாறு இருவரிடமும் கோரியுள்ளதாகவும் -

சர்வமதக்குழுத் தலைவர் கும்புறுவேவ வஜிர தேரர் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் தலைவர் வே.பிரபாகரனுக்கு கடந்த 31ஆம் திகதிகடிதம் அனுப்பியுள்ளதாகவும் அவரிடம் இருந்து இன்னமும் பதில் கிடைக்கவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-3)

## உரும்பிராயில் சிவகுமாரனுக்கு சிலை நிறுவ அனுமதி மறுப்பு!

யாழ்ப்பாணம்,ஜன.5

தியாகி சிவகுமாரனுக்கு உரும்பிராயில் சிலை அமைக்க படையினர் அனுமதி மறுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சிலையை நிறுவ அனுமதி கோரப்பட்டதற்கு 511ஆவது படையணியினர் அனுமதி வழங்க மறுத்துள்ளதாக ஈ.பி.டி.பி அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

வலி.கிழக்கு பிரதேசசபையும் ஈ.பி.டி.பி அமைப்பும் இணைந்து சிவகுமாரனின் சிலையை சுமார் 10லட்சம் ரூபா செலவில் வெங்கலத்தில் வடித்துள்ளன. இந்தச் சிலையை உரும்பிராயில் எதிர்வரும் 10ஆம் திகதி நிறு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வெளிநாட்டு உதவியை நிறுத்தவேண்டும்

## ராஜதந்திரிகளிடம் ரணில் வற்புறுத்தல்



**கொழும்பு,ஜனவரி5**

**வெளிநாட்டு உதவிகளைப் பெற்று யுத்தத்தைத் தீவிரப்படுத்த அரசு முனைகிறது. யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமானால் வெளிநாடுகள் இலங்கைக்கு வழங்கும் உதவிகள் தவிர்க்கப்பட வேண்டும்.**

**ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் உள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகளிடம் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.**

கொழும்பில் உள்ள பத்துக்கும் மேற்பட்ட நாடுகளின் ராஜதந்திரிகளுடன் நேற்று நடத்திய கலந்துரையாடலிலேயே எதிர்க்கட்சித்தலைவர் மேற்கண்டவாறு கோரியதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

அவரது அலுவலகத்தில் நேற்று காலை 10மணிக்கு இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் அமெரிக்கா,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றத் தேர்தல் குறித்து அமைச்சரவையில் இன்று முடிவு?

கொழும்பு,ஜன.5

அமைச்சரவையில் மாற்றங்களைச் செய்வது மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்துவது என்பன தொடர்பாக இன்று நடைபெறும் அமைச்சரவை கூட்டத்தில் ஆராயப்பட இருப்பதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த வெற்றியுடன் நாடாளுமன்றத்துக்கான தேர்தலை நடத்துமாறு பல அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் வற்புறுத்தி வருவதாகவும் -

அதேவேளை அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்தி அரசில் சேர்ந்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராமமூர்த்தி பிணையில் விடுவிப்பு

கொழும்பு,ஜன.5

நீர்கொழும்பில் வைத்து துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஈ.பி.டி.பி அமைப்பில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் எம்.பியான ஆர்.ராமமூர்த்தி நீர்கொழும்பு நீதிவானால்நேற்றுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

## கப்பலில் சென்ற இரு இளைஞர் கைது

திருகோணமலை,ஜன.5

காங்கேசன்துறையில் இருந்து திருமலைக்கு நேற்று வந்து சேர்ந்த 'லங்கா முடித்த' கப்பலில் பயணம் செய்த இரு இளைஞர்கள் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இவ்விருவரும் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற விவரம் நேற்றிரவு வரை வெளியாகவில்லை. (ஐ-3-150)

## கப்பலுக்கு இன்று டிக்கெட் பெறலாம்

யாழ்ப்பாணம்,ஜன.5

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு நாளை மறுதினம் இடம்பெறவுள்ள 'லங்காமுடித்த' பயணிகள் கப்பல் சேவையில் பயணம் செய்ய விரும்புபவர்களுக்கான டிக்கெட்டுக்கள் இன்று காலை 10.30 மணிமுதல் வழங்கப்பட இருப்பதாக யாழ். சிவில்நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

குடாநாட்டுக்கு வெளியே செல்வதற்கான அனுமதியைப் பெற்றவர்களை யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு வந்து டிக்கெட்டுக்களைக் கொள்வனவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## டக்ளஸ் தேவானந்தாவுக்கு பிரதி அமைச்சர் பதவி?

கொழும்பு,ஜன.5

அமைச்சரவையை விரிவுபடுத்தும்போது ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு பிரதி அமைச்சர் பதவி வழங்கப்படலாம் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புனர்வாழ்வு, புனரமைப்புடன் சம்பந்தப்பட்டதாக இந்த பிரதி அமைச்சர் பதவி வழங்கப்படலாம் என்று கூறப்படுகின்றது. இ.தொ.கா. நாடாளுமன்ற உறுப்பினர் யோகராஜனுக்கும் அமைச்சரவையில் இடம் கிடைக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் ஏ.எஸ் ஜெயவர்த்தனா பிரதி நிதி அமைச்சராக் நியமிக்கப்படுவார் என்றும் அதன் பொருட்டு அவர் தேசியப் பட்டியல் எம்.பி.யாக நியமிக்கப்படுவார் என்றும் அறியப்படுகிறது.

இதேவேளை -

மக்கள் ஐக்கிய முன்னணி தலைவர் தினேஸ் குணவர்த்தனவுக்கும் அமைச்சர் பதவி வழங்கப்படலாம் என அரசியல்வட்டாரங்களில் பேசப்படுகிறது.

## மண்டபம் முகாமில் மூவர் கைது

சென்னை,ஜன.5

இந்தியாவில் இருந்து விடுதலைப் புலிகளுக்குத் தேவையான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை இலங்கைக்குக் கடத்திச் செல்ல முயன்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 3 ஈழத்தமிழர்கள் தமிழகப் பொலீஸாரினால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

மண்டபம் அகதி முகாமில் அகதிகள் என்ற போர்வையில் தங்கியிருந்த சமயமே இவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டதாகவும் -

கைது செய்யப்பட்டவர்களில் இருவர் விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளதாகவும் -

பொலீஸார் அறிவித்துள்ளனர். (ஐ-7)

### புங்குடுதீவு சம்பவம்:

## நீதிமன்றில் இன்று சாட்சியங்கள் பதிவு

யாழ்ப்பாணம்,ஜன.5

புங்குடுதீவில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சரவணபவானந்தக் குருக்கள் சாரதாம்பாளின் மரண விசாரணை இன்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் பதில் நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

மரண விசாரணையின் போது இச்சம்பவம் தொடர்பான சாட்சியங்கள் பதிவுசெய்யப்படவுள்ளன.

பாலியல்வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட இந்த இளம் பெண்ணின் சடலம் மருத்துவப் பரிசோதனைக்காக கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு கடந்தவாரம் அனுப்பிவைக்கப்பட்டது.

மருத்துவ அறிக்கை சட்ட வைத்திய அதிகாரி எஸ்.பி.எஸ்.டி.சில்வாவினால் ஊர்காவற்றுறை பொலீஸாரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் -

அந்த அறிக்கை இன்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் சமர்ப்பிக்கப் படலாம் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ஐ-5-10)

### குண்டுத் தாக்குதல் விசாரணைக்கு

## 5 அமெரிக்க நிபுணர்கள் கொழும்புக்கு வந்தனர்

கொழும்பு,ஜன.5

கொழும்பு நகர மண்டப வளாகத்திலும் ஜா-எலவிலும் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள அமெரிக்காவில் இருந்து ஐந்து நிபுணர்கள் நேற்றுமுன்தினம் இரவு கொழும்பு வந்துசேர்ந்தனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்திவரும் உள்நாட்டுப் பொலீஸ் குழுவினருடன் நேற்று இவர்கள் கலந்துரையாடினர்.

கொழும்பில் இரு வாரங்கள் தங்கியிருக்கும் இக்குழுவினர் குண்டுத்தாக்குதல்கள் தொடர்பாகப்பலரின் வாக்கு மூலங்களைப் பதிவு செய்யவிருக்கின்றனர்.

இதேநேரம் -

தற்கொலைக் குண்டுத்தாக்குதல் நடத்தியதாகச் சந்தேகிக்கப்படும் பெண்ணின் தலை லண்டனுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அங்கு நடத்தப்படும் பரிசோதனை அறிக்கையை விரைவாகப் பெற்று முழுமையாக விசாரணைகளை மேற்கொள்ளநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## விசாரணை நடத்த சி.ஐ.டி குழு வருகை

கொழும்பு,ஜன.5

புங்குடுதீவில் இளம் தாயான சாரதாம்பாள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக சி.ஐ.டி பணிப்பாளர் கீர்த்தி கஜநாயக்கா தலைமையில் விசேட புலனாய்வுக்குழு ஒன்று யாழ்ப்பாணம் வந்துள்ளதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்குழு யாழ்ப்பாணத்தில் பலரை விசாரணைக்குட்படுத்தியதாகவும் -

இந்தக் குழுவுக்குப்புறம்பாக கடற்படைப் பொலீஸாரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் -

மேலும் தெரிவிக்கப்பட்டது.

# ஜனாதிபதியின் உரை சிறுபிள்ளைத்தனமானது!

## கண்டிக்கிறது ஐ.தே.க.

கொழும்பு,ஜன.5

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ரூபவாஹினி மூலம் நேற்று முன்தினம் இரவு ஆற்றிய நீண்ட உரையில் வெளியிட்ட தகவல்கள்மிகவும்சிறுபிள்ளைத்தனமானவை என்று ஐக்கிய தேசியக் கட்சி சாடியுள்ளது.

ஜனாதிபதியின் உரையை விமர்சித்து ஐ.தே.க. நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஜனாதிபதி ஆற்றிய உரை சிறுபிள்ளைத்தனமானது மட்டுமன்றி தான் தோன்றித்தனமானதுமாகும்.

வர்த்தகர்களையும் ஊடகவியலாளர்களையும் கடுமையாகச் சாடியுள்ளார் ஜனாதிபதி. அவர்களில் குற்றம் இருந்தால் வழக்குத் தாக்கல் செய்யலாம். அதைவிட்டு அவர்களைத்தூற்றுவது நியாயமற்றது. எமது கட்சியையும் அவர் விட்டுவைக்கவில்லை. தான் தோன்றித்தனமாகவே கருத்துக்களைக் கூறியுள்ளார். யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து சமாதானம் ஏற்பட நாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவோம் - என்று அந்தஅறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-3)

## கண்ணி அகற்றும் பணிக்கு மேலும் குழுக்கள் இங்கு வரும்

யாழ்ப்பாணம்,ஜன.5

குடாநாட்டில் மிதிவெடி மற்றும் கண்ணிவெடிகளை அகற்றும் பணியைத் துரிதமாக்கவும் விஸ்தரிக்கவும் வசதியாக ஸிம்பாவேயில் இருந்து மேலும் பல குழுக்கள் இம்மாத இறுதியில் இங்கு வரவிருக்கின்றன.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தினரின் ஏற்பாட்டில் ஸிம்பாவேயைச் சேர்ந்த பத்து நிபுணர்கள் குடாநாட்டில் பல பகுதிகளில் இந்தப் பணியில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பாராட்டுகின்றோம்

★★★★★★★★★★★★★★★★★★

## யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி

க. பொ. த. உயர்தரப் பெறுபேறு 1999

செல்வி க. சுகிர்தா கலை 3 ஏ 1 பி
(மாவட்ட நிலை 08)

செல்வி சி. சாமினி கலை 3 ஏ 1 பி
(மாவட்ட நிலை 09)

இவர்களுடன் 75% மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்குத் தகுதி பெற்றுள்ளார்கள். இவர்களை மனமார பாராட்டுவதுடன் இவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

உரும்பிராய் இந்துக் கல்லூரி,
உரும்பிராய். (72369)

---

அமரர் ஸ்ரீ பாஸ்கரன் அவர்களின்
ஞாபகார்த்தமாக

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம்

## மூக்குக் கண்ணாடி வழங்கல்

இடம்: சு. ஸ்ரீ பாஸ்கரன் இல்லம்
காலம்: 09-01-2000 ஞாயிறு
காலை 8.30 மணி

கண்பரிசோதனை:
எரிக் கணேஷ் நிறுவனத்தினர்

வலிகாமம் தெற்கில் வறுமைக் கோட்டின் கீழ் கண்பார்வை குறைந்தோர் மூக்குக் கண்ணாடிகளைப் பெற விரும்பின் கிராம உத்தியோகத்தரின் அத்தாட்சிப் பத்திரத்துடன் அல்லது மாணவர்களாயின் அதிபரின் அத்தாட்சிப் பத்திரத்துடன் வருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பதிவுப் பணமாக ரூபா 100/-
செலுத்தல் வேண்டும்.

- திருமதி பா. ஸ்ரீ பாஸ்கரன்

மல்லாகம். (72376)

---

யாழ்.
றோட்டறிக் கழகம்

## சிறு தொழில் விற்பன்னர் தெரிவு

சிறு தொழில்துறைகளில் சிறந்த விற்பன்னர்கள் பலர் சமூகத்தில் இலைமறைகாயாக வாழ்கின்றனர். அவர்களை எமது கழகம் இனங்கண்டு ஆண்டுதோறும் கௌரவித்து வருகின்றது. பாராட்டுக்கு உகந்தோரெனக் காணப்படுவோரை சிபார்சுசெய்யும்படி கிராம அபிவிருத்திச்சங்கங்கள், சனசமூக நிலையங்கள் இன்ரறக்ற் கழகங்கள், றோட்டறக்ற் கழகங்கள், றோட்டறி சனசமூகக் குழுக்கள் போன்றவற்றை அன்புடன் வேண்டுகின்றோம். சிபார்சுகள் பரிசீலிக்கப்பட்டு சிறந்தவர்கள் தெரிவு செய்யப்படுவர். சிபார்சில் தெரிவுக்கான காரணங்களும் நீங்கள் தெரிவுசெய்யப்பட்டவர் சம்பந்தமான சுய விவரங்களும் தரப்படல் வேண்டும். இத்தெரிவில் றோட்டறிக்கழகமே இறுதி முடிவினை எடுக்கும்.

முடிவு திகதி 31 - 01 - 2000

தொழில்துறை இயக்குநர்
யாழ். றோட்டறிக்கழகம்

றோட்டறிக்கழகம்
347, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி-10489)

---

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் பரமநாதர் நவரட்ணம்

எமது பாடசாலையில் சேவையாற்றி
இளைப்பாறிய ஆசிரியை
திருமதி க. நவரட்ணம் அவர்களின் கணவர்
பரமநாதர் நவரட்ணம்

அவர்கள் இறைபதமெய்தியமையால் அவரை இழந்து துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை
(சி/10496)

---

## நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஜன. 5

கிளாலி ஆத்மஜோதி சகோதரர் பிரான்சிஸ் அடிகளார் நினைவுதினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

19 வருடங்களுக்கு முன்னர் குருநாகலில் இடம்பெற்ற ரயில் விபத்தில் உயிரிழந்த அருட்சகோதரர் சி. அ. பிரான்சிஸ் அடிகளுக்கு யாழ். சுண்டுக்குளிபுனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தில் இன்று காலை 6.30 மணிக்கு பங்குத் தந்தையினால் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். (இ)

---

NEWTON
342, ஸ்ரான்லி வீதி,
A/L தோற்றியவர்களுக்கான
SPOKEN ENGLISH
By. BRITTO
புதிய பிரிவு
08-01-2000
காலை 9 — 10
B. A. Part I (யாழ்.)
காலை 8 — 9
(72353)

---

ராஜா
யாழ்ப்பாணம்
கடைசி வாரமாக
விஜய் - ஷாலினி
மற்றும் பலர் நடித்த
காதலுக்கு மரியாதை
வெள்ளி முதல்
அவள் வருவாளா
10.30, 2.30
[சி/10420]

---

லிபேட்டி அச்சுவேலி
பார்த்தீபன் - மீனா
நடித்த
உன்னருகே நானிருந்தால்
காட்சிகள்: 10.30, 2.30
T. P. 070-212223
007-212678
[72242]

---

துசி வெண்திரையில்
(ஆவரங்கால்)
சரத்குமார்
தேவயாணி, ரம்பா
நடிப்பில்
ஷண்ணின்
பாட்டாளி
(9.30, 12.30, 3.00)
(72383)

---

நேற்று முதல்
காட்சியளிக்கின்றது.
றீகல் (ஸ்ரான்லிவீதி)
றீகல் டாக்கீஸ்
(ஈச்சமோட்டை)
சரத்குமார்,
தேவயாணி நடிப்பில்
ஷண்ணின்
பாட்டாளி
10.30, 2.30
(72384)

---

நாகம்ஸ்
சுன்னாகம்
05 - 01 – 2000 முதல்
வினித், சுலக்ஷனா
நடித்த
ஆவாரம்பூ
காட்சிகள்: 11.00, 2.30
(புதிய நேரம்)
[72292]

---

## St. John's Parish Nursery School, Chundikuli

எமது பாலர் பாடசாலை இன்று (05-01-2000) காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகின்றது. விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டவர்கள் பிள்ளைகளை அனுமதிக்கவும். சில வெற்றிடங்கள் மாத்திரமே இருப்பதால் 08-01-2000 இற்கு முன் உங்கள் பிள்ளைகளின் அனுமதியை உறுதிசெய்யவும்.

- Vicar

St. John's Parish,
Chundikuli. (72377)

---

## விக்னா கல்வி நிறுவனம்

இல. 52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L கலை, வர்த்தக வகுப்புகளுக்கு

தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்கள்
ஒருங்கிணைந்து போதிக்கும் ஒரே நிறுவனம்

2002 கலை, வர்த்தகம்

ஆரம்பம்: 8 - 1 - 2000 9 மணி
(72387)

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மயில்வாகனம் மீனாட்சி

(இளைப்பாறிய ஆசிரியை)

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த திருமதி மயில்வாகனம் மீனாட்சி அவர்கள் நேற்று (04-01-2000) காலமானார்.

அன்னார் மயில்வாகனத்தின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்பு மனைவியும் திரவியம் (பிரான்ஸ்), தவமணி (ஜேர்மனி), சிறீதரன் (பிரான்ஸ்), சரவணபவான் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (05-01-2000) காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மயில்வாகனம்
(கணவர்)

கந்தசுவாமி கோயில் ஒழுங்கை,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (72335)

---

## இராமசாமி இராமலிங்கம் ஆச்சாரி

யாழ்ப்பாணம் கன்னாதிட்டியைச் சேர்ந்த இராமசாமி இராமலிங்கம் அவர்கள் 03-01-2000 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் பார்வதியின் அன்புக் கணவரும் சுப்பிரமணியம் (கொழும்பு), மகாதேவன், அருணாசலம் (கொழும்பு), மகேஸ்வரி (மட்டக்களப்பு), இராமச்சந்திரன் (கொழும்பு), பத்மாவதி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானலட்சுமி, புஸ்பராணி, நாகேஸ்வரி, கோகிலா, நடராஜா, ரவி ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (5-1-2000) கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
இ. மகாதேவன் (தேவா)
(மகன்)

8/2, கன்னாதிட்டி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (72389)

---

## திருமதி தம்பு பார்வதி

கொழும்புத்துறை கிழக்கைச் சேர்ந்த திருமதி தம்பு பார்வதி 04—01—2000 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அமரர் விநாசித்தம்பி தம்பு அவர்களின் பாரியாரும் தம்பு தியாகராஜா (முன்னாள் ஆசிரியர்), தம்பு கந்தையா (முன்னாள் M. M. C. ஹேலண்ட்), தம்பு கனகசபை (சட்டத்தரணி, கொழும்பு), தம்பு நடராசா (மிருக வைத்தியர், கனடா), தம்பு சுப்பிரமணியம் (லண்டன்), ச. சிவபாக்கியம், சு. சரஸ்வதி, க. புவனேஸ்வரி ஆகியோரின் தாயாரும், சண்முகராஜா, சுப்பிரமணியம், கணபதிப்பிள்ளை (சட்டத்தரணி), தி. இந்திராணி, க. நாகேஸ்வரி, க. ரஞ்சிதமலர், ந. நாகேஸ்வரி, சு. விஜயலக்ஷ்மி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (05—01—2000) புதன்கிழமை பகல் 10 மணியளவில் இல. 75, மானிப்பாய் வீதியிலுள்ள அன்னாரது மகளின் இல்லத்திலிருந்து யாழ்ப்பாணம் வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
த. தியாகராஜா
(மகன்).

கொழும்புத்துறை. (72354)

# திம்புக்கோட்பாடுகள் அடிப்படையில் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குதீர்வு

## ஐக்கிய தொழிலாளர் காங்கிரஸ் கோரிக்கை

கொழும்பு, ஜன. 5

''வடக்கு—கிழக்கின்தேசிய இனப்பிரச்சினை திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையில் தீர்க்கப்படவேண்டும். இந்த திம்பு கோட்பாடுகளின் நான்காவது கோட்பாடு மலையகத்தமிழர்களின் குடியுரிமை சம்பந்தப்பட்டதாகும்''.

இவ்வாறு ஐக்கிய தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மலையகம், கொழும்பு வடக்கு—கிழக்குப் பிரதேசங்களில் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்திய வம்சாவளித் தமிழர்களையும் ஈழத்தமிழர்களையும் ஜனநாயக ரீதியாக ஒன்றுபடுத்தி அணிசேர்க்கும் முயற்சிகளை ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஆதரிக்கும். இது இன்றைய காலத்தின் கட்டாயம் மட்டுமல்ல, நியாயமானதும் கூட.

தென்னிலங்கையிலே வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழர்களை மலையகத்தான், இந்தியத்தமிழன், கொழும்புத் தமிழன் என்றெல்லாம் பேரினவாதிகள் அடையாளங் காணபதில்லை. அதேபோல வடக்கு — கிழக்கிலே இன்று வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழர்களை யாழ்ப்பாணத்தான், மட்டக்களப்பான், திருகோணமலையான், வன்னியான் என்றெல்லாம் அடையாளங்காண்பதில்லை.

சிங்கள பௌத்த பேரினவாதிகளைப் பொறுத்தவரையில் அனைவருமே சிறுபான்மைத்தமிழர்கள்தான்.

அது மாத்திரமல்ல, மலையகத்திலே வாழ்ந்துகொண்டிருக்கும் தோட்டத் தொழிலாளர்களை அவர்களது வர்க்க அடிப்படையில் தொழிலாளர் வர்க்கம் என்றுகூட தென்னிலங்கை பெரும்பான்மைக்கட்சிகள் அழைப்பதில்லை. தோட்டத் தொழிலாளர்களின் மீதான ஒடுக்குமுறை வர்க்க ரீதியானது என்பதை விட, தமிழ்த் தொழிலாளர்கள் என்ற இன ரீதியானது என்று சொல்ல வேண்டும். பெரும்பான்மை இடதுசாரிக் கட்சிகள் கூட இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்லர்.

நமது மலையகத்தொழிலாளர்களின் தொழிற் சங்கப் பிரச்சினைகளுக்காக சிங்களத் தொழிலாளர் வர்க்கத்தை அணிதிரட்டி ஒருபோதும் ஒரு போராட்டமாவது நடத்தப்படவில்லை.

இவ்விதமாக பேரினவாதம் தமிழர்களை இனரீதியாக அடக்கி ஒடுக்கும் பொழுது தமிழர்கள் இந்த அடக்குமுறைக்கு எதிராகத் தமது மொழி, இனரீதியாக அணிதிரள்வது நியாயமானதே.

பொதுவாக இன்று நாட்டிலே வடக்கு — கிழக்கு மக்களின் தேசிய இனப்பிரச்சினையே முதன்மையானது. இதன் பக்கவிளைவாகவே தமிழர்கள் என்ற காரணத்தால் மலையகத் தமிழர்களும் துன்புறுத்தப்படுகின்றார்கள். பொலிஸ் கெடுபிடிகள் தலைவிரித்தாடுகின்றன. மலையக இளைஞர்கள் விசாரணையின்றி வருடக் கணக்கில் சிறைகளில் வாடுகின்றனர்.

### அறிவு பூர்வமான அணுகுமுறை தேவை

அதேவேளையில் தமிழர் என்ற அடிப்படையில் அணிதிரள்வது, வெறும் உணர்வு பூர்வமாக செய்யப்படக்கூடாது. இந்த விடயத்தை நாம் அறிவு பூர்வமாகவே அணுக வேண்டும்.

இன்று வடக்கு — கிழக்கிலே ஓர் ஆயுத போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அந்தப் போராட்டமும் கூட கெரில்லாப் போராட்டம் என்ற நிலையிலிருந்து இன்று மரபுவழி யுத்தமாக மாறியுள்ளது. அது மாத்திரமல்லாமல் பாரம்பரியமாக வளர்ச்சிபெற்ற ஓர் அரசியல் தலைமை வடக்கு — கிழக்கு ஈழத்தமிழர்களுக்கு இருக்கின்றது.

ஆனால் மறுபக்கத்திலே தென்னிலங்கையில் இத்தகைய நிலைமைகள் காணப்படவில்லை. தென்னிலங்கையில் ஆயுதப் போராட்டம் நடைபெறவில்லை. அதற்கான சூழ்நிலையும் கிடையாது. மலையகத் தமிழர்களைப் பொறுத்தவரையில் ஓர் அரசியல் தலைமை முழுமையாக இன்னமும் உருவாகவில்லை. இருப்பதெல்லாம் பெரும்பாலும் தொழிற்சங்க தலைமைகள் ஆகும்.

எனவே ஒன்றுபட்ட தமிழர் அணி முயற்சியின் போது மேற்கண்ட வடக்கு —கிழக்குகள நிலைமைகளையும் தென்னிலங்கை மலையக நடைமுறை நிலைமைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஈழத்தமிழர்களினதும் மலையகத் தமிழர்களினதும் ஐக்கிய செயற்பாடு ''உரிமைக்குக் குரல் கொடுப்போம். உறவுக்குக்கைகொடுப்போம்'' என்ற அடிப்படையில் அமைய வேண்டும்.

அல்லலுறும் ஈழத்தமிழர்களுக்கு ஐ.தொ.கா எப்போதுமே கைகொடுத்து வந்துள்ளது. அதேவேளை ஈழத் தமிழர்களின் அரசியல் தலைமையுடன் முரண்பட்டு அந்த மக்களுக்கு தலைமைவகிக்கும் அரைவேக்காடு முயற்சிகளில் நாம் இறங்கியதில்லை. அதே போல தென்னிலங்கை மலையகத் தமிழர்களின் அரசியல் தலைமையும் இந்த மக்கள் மத்தியிலிருந்தே உருவாகிவர வேண்டும்.

### திம்புக் கோட்பாடு

வடக்கு— கிழக்கின் தேசிய இனப்பிரச்சினை திம்பு கோட்பாடுகளின் அடிப்படையில் தீர்க்கப்படவேண்டும். இந்த திம்பு கோட்பாடுகளின் நான்காவது கோட்பாடு மலையகத் தமிழர்களின் குடியுரிமை சம்பந்தப்பட்டதாகும். ஆனால் . இன்றைய காலகட்டத்தில் பாரிய வளர்ச்சி பெற்றுள்ள இந்திய வம்சாவளி மலையக தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினையை குடியுரிமை பிரச்சினையுடன் மாத்திரம் மட்டுப்படுத்திவிட முடியாது.

மலையக மக்கள் சம்பந்தமான புதிய கோட்பாடுகள் உருவாகி வருகின்றன, தேசிய இனப்பிரச்சினைத்தீர்வு யோசனைகளில் வடக்கு—கிழக்கிலே வாழும் முஸ்லிம் மக்களுக்கான அதிகாரப்பரவலாக்கல் பற்றிப் பேசப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்திலே குடியேற்றப்பட்டுள்ள சிங்கள மக்கள் பற்றியும் சொல்லப்படுகின்றது. ஆனால் அதிகாரப்பரவலாக்கலைப் பொறுத்தவரையில் மலையகத்தமிழர்கள் ஒரு மறக்கடிக்கப்பட்ட இனமாக நடத்தப்படுகின்றார்கள். இதை இனிமேலும் அனுமதிக்கமுடியாது. தென்னிலங்கையிலே மலையகத்தமிழர்களுக்கு நிர்வாக ரீதியான அதிகாரப்பரவலாக்கலும் கலாசார சுயாட்சியும் தேவை.

எனவே திம்புக் கோட்பாடுகளுடன் மலையக மக்கள் சம்பந்தமான புதிய கோட்பாடுகளையும் ஒன்றிணைத்து புதிய பொதுத் தமிழர்கோட்பாடுகள் முன்வைக்கப்படவேண்டும் இந்த அடிப்படையில் ஒன்றுபட்ட தமிழர் அணி உருவாவதை ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் அரசியல் அணி வரவேற்கின்றது— என்றுள்ளது.

# வலய மட்டத்தில் நடத்தப்பட்ட கலாசாரப் போட்டி முடிவுகள்

வலிகாமம். தெற்கு. ஜன. 5

'யுனெஸ்கோ' நிறுவனத்தின் ஆதரவுடன் வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்ட கலாசார போட்டிகளில்முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

**நடனம்:-**

முதலாம் இடம் —சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, 2 ஆம் இடம்— மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, 3 ஆம் இடம் — ஆனைக்கோட்டை றோ. க. த க. பாடசாலை.

**நாடகம்:-**

முதலாம் இடம்— மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, 2 ஆம் இடம்— சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, 3 ஆம் இடம்— ஆனைக்கோட்டை றோ. க. த. க. பாடசாலை.

**சித்திரம்**

முதலாம் இடம்— அ. மனோகரன் (மானிப்பாய்), மெமோறியல் ஆ. பா.), 2 ஆம் இடம்—தி. வெரோணியா (சில்லாலைறோ. க. த. க. பா) 3 ஆம் இடம் —நீ. ஜெசிந்தன் — (தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்),

**கட்டுரை**

முதலாம் இடம் — ச. சுகன்யா, விக்ரோறியாக் கல்லூரி), 2 ஆம் இடம் — க. சித்திரா— (அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்) 3 ஆம் இடம்— வி. விக்னேஸ்வரி (மானிப்பாய் மெமோறியல் ஆ. பா ).

**கவிதை**

முதலாம்இடம்—ம. அமலினி (ஏழாலை சைவ மகா(ஜனா), 2 ஆம் இடம் — ந. இராமநந்தினி (சுழிபுரம் சிந்மய பாரதி வித்தியாலயம்), 3 ஆம் இடம்— ட. டசினி (பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்),

மேற்படி போட்டியாளர்களும் குழுக்களும் மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர். (க-152)

# தமிழையும் சைவத்தையும் காக்க மற்றொரு நாவலர் தோன்ற வேண்டும்

## நாவலர் விழாவில் உரை

வலிகாமம் தெற்கு, ஜன.5

'நாவலர்காலத்து நிலைக்கு யாழ்ப்பாணம் மீண்டும் வந்து கொண்டிருக்கிறது. அன்று பட்டம், பதவிகளுக்காக ஆங்கிலத்தைப் படித்து சைவத்தையும் தமிழையும் இழந்தார்கள். இன்று பணத்துக்காக வெளிநாடுகளுக்கு ஓடி ஓடி தமிழையும் சைவத்தையும் எமது இனம் இழந்து கொண்டிருக்கிறது. இதனைத் தடுக்க நம்மிடையே மற்றொரு நாவலர் அவதரிக்க வேண்டும்.'

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினரால் உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்தில் நடத்தப்பட்ட நாவலர் விழாவில் 'நாவலர் இல்லா நாடு' என்ற தலைப்பில் உரையாற்றிய முன்னாள் யாழ். மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு மேற்கண்டவாறு கூறினார்.

பிள்ளையார் பல்பொருள் வாணிப நிறுவனத்தின் ஆதரவில் இடம்பெற்ற நாவலர் விழாவுக்கு உடுவில் இந்து இளைஞர்மன்றத் தலைவர் தி. தியாகச்சந்திரன் தலைமை வகித்தார்.

மு. திருநாவுக்கரசு தமது உரையின்போது மேலும் கூறியதாவது,

ஆங்கிலத்தைப் படித்து, ஆங்கிலேயருக்கெதிராகப் போராடி, அவர்களால் முன்னெடுக்கப்பட்ட சமய பிரசாரங்களை முறியடித்து, சைவத்தையும் தமிழையும் காத்தவர் நாவலர், 'நல்ல தமிழ் என்றால் அதற்கு யாழ்ப்பாணமே' என பாராட்டி எழுதும் அளவுக்கு தமிழை நிலைபெறச் செய்தவர் நாவலர். இந்து சமய தத்துவங்களை உணர்ந்து அவற்றை மேலை நாட்டவர்கள் வந்து ஆராய்ந்துபடிக்கக் கூடிய நிலையை நாவலர் தோற்றுவித்துள்ளார்— என்றார்.

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினரால் நடத்தப்பட்டு வரும் பாலர் பாடசாலைகளுக்கிடையே மன்றத்தின் ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் பரிசுபெற்ற சிறுவர்களுக்கான பரிசுகளையும் மு. திருநாவுக்கரசு வழங்கினார்.

இந்து இளைஞர் மன்ற காப்பாளர் ஆறு. திருமுருகனும் உரையாற்றினார்.

பாலர் பாடசாலை மாணவர்களின் பேச்சு, குழுநடனம், தாளலயம், கோலாட்டம், அபிநயபாட்டு, ஆங்கிலபாடல், நாடகம் என்பனவும் இடம்பெற்றன.

(உ.-152)

# திருவாசகம் முற்றோதல்

வட்டுக்கோட்டை அராலி வீதி விளானையம்பதி வைரவர் ஆலய திருவாசக முற்றோதல் விழா, எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் விசேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து இடம்பெறும்.

# செய்திச் சரம்

### கருத்தரங்கும் படக்காட்சியும்

தென்மனைச் செய்கைக் கருத்தரங்கும் படக்காட்சியும் கடந்த டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி உடுவில் பிரதேச செயலகத்திலும் 28 ஆம் திகதி தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்திலும் யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ. சந்திரேந்திரனால் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் அவ்வப் பகுதி பிரதேச செயலர்களும் பிராந்திய முகாமையாளர் சி. சிவச்சந்திரனும் சிறப்புரையாற்றினார்கள். மேலும் கிராம அலுவலர்கள், விவசாய சம்மேளன உறுப்பினர்கள் சமூர்த்தி அலுவலர்கள் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-க)

### ஒன்றுகூடல் வைபவம்

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடந்த வெள்ளிக்கிழமையன்று நடத்தப்பட்ட வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வின் போது யாழ். பதில் சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளராகப் பணியாற்றிய டாக்டர் கே. ரி. சிவபாதத்தின் சேவை நலன் பாராட்டும், புதிதாக பதில் சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளராகப் பதவி ஏற்றுள்ள டாக்டர் (செல்வி) உமா. சிவபாதசுந்தரத்துக்கு வரவேற்பும் இடம்பெற்றது. பணிமனையின் பொறுப்பதிகாரி எம். இராஜேந்திரா தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் இப் பிரிவிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகள், இப்பிரிவு பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப சுகாதார சேவை அலுவலர்கள் உட்படபலர் கலந்துகொண்டனர். (க-135)

### நன்கொடை

இணுவில் அரசினர்வைத்தியசாலைக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கென பல இலட்சம் ரூபா பெறுமதியான 13 பரப்பு ஐந்து குழி காணியை கொழும்பிலுள்ள வர்த்தகர் ஒருவர் நன்கொடையாக வழங்கியுள்ளார்.

இணுவிலைச் சேர்ந்தவரும், கொழும்பில்வசித்து வருபவருமான கல்கிபீடி நிறுவன உரிமையாளர் சிவக்கொழுந்து சின்னத்துரை என்பவரே சுமார் 15 இலட்சம் ரூபா பெறுமதியான காணியை யாழ். சுகாதார திணைக்களத்துக்கு அன்பளிப்புச் செய்துள்ளார். (க-135)

### வகுப்பறைக் கட்டடங்கள் அமைப்பு

பெரியவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் ஐந்து லட்சம் ரூபா செலவில் புதிய வகுப்பறைக் கட்டடங்கள் அமைக்கப்பட்டு பூர்த்தியாகும் நிலையில் உள்ளன.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் இந்தவகுப்பறைக்கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதேபோல் —

மேற்படி ஸ்தாபனத்தின் உதவியுடன் மாரீசன் கூடல் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வகுப்பறைகள் மற்றும் மலசலகூடங்களின் திருத்த வேலைகளும் ஐந்து இலட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-152)

# கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறை மீள்குடியேற்ற காரியாலயத்தின் தொழில் நுட்ப உத்தியோகத்தர்

திரு. செ. செல்வநாயகத்தின்

தந்தையார்

## சபாபதி செல்வரத்தினம்

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
உதவி அரசாங்க அதிபர் பணிமனை,
ஊர்காவற்றுறை.

(72336)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## தங்கராசா விமலேஸ்வரன்

(அஞ்சலக சேவகர், சாவகச்சேரி)

அன்னை மடியில்:– 10 - 06 - 1967
ஆண்டவன் திருவடியில்:- 16 - 12 - 1998

திதி:- 5 - 1 - 2000 (புதன்கிழமை)

அன்பின் பிறப்பிடமாக, பாசத்தின் உறைவிடமாக, பண்பின் சிகரமாக, கொடையில் வள்ளலாக, வாழ்வில் வழிகாட்டியாக வாழ்ந்த எம் குலவிளக்கே! பாதியில் மறைந்த மாயம் என்னவோ?

தங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல நுணாவில் அம்பாளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

[சி/10476]



# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 08 01 1923



உதிர்வு: 08 — 01 — 1997

## அமரர் பொன்னையா நவரத்தினசிங்கம்

— சமாதான நீதிவான் —

(உரிமையாளர், யாழ்தேவி ரான்ஸ்போட் சேவிஸ்)

திதி: 05 - 01 - 2000

எங்கள் குடும்பத் தலைவனாய், அன்பின் திருவுருவாய் வாழ்ந்து எங்களுக்கு வாழ்வளித்த வழிகாட்டியே! எங்களுக்காகவே வாழ்ந்து, எங்களுக்காகவே பிரார்த்தித்து, எங்கள் நினைவுடனே இயற்கை எய்திய நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டு மூன்று போயினும், உங்கள் திருவுருவம், பாச நினைவுகள் என்றென்றும் எங்கள் மனதில் நீங்காது நிற்கும்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிமார்,
உறவினர்கள்.

புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு,
கல்வியங்காடு.

(72322)


# கிராம அலுவலரின் சீருடைக்கான கொடுப்பனவு

நவாலி, ஜன. 5

கிராம அலுவலர்களின் சீருடைக்கான கொடுப்பனவு இந்த ஜனவரி முதல் ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவு அதிகரிப்பு சம்பந்தமான சுற்றுநிருபம் பொதுநிர்வாக உள்நாட்டு அமைச்சினால் சகல பிரதேச செயலகங்களுக்கும் உதவி அரசாங்க அதிபர் அலுவலங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கிராம அலுவலர்களுக்கான இந்தக் கொடுப்பனவுகள் இதுவரை காலமும் 750 ரூபாவாகவே இருந்துவந்தது

(உ–4–100)


வந்துவிட்டது!

BABY PAMPERS
(குழந்தைகளுக்கான ஜங்கி)

லிங்கன் ஸ்ரோர்ஸ்,
168, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P -3368

(சி/10472)


# இரண்டாம் கட்ட கொடுப்பனவு

வலி. மேற்கு, ஜன. 5

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் வீடுகள் சேதமுற்றோருக்கான 25 ஆயிரம் ரூபாவின் இரண்டாம் கட்டக் கொடுப்பனவான 15 ஆயிரம் ரூபா 254 பேருக்கு வழங்கப்படவுள்ளது.

வடக்கின் மீள்குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையினரால் வழங்கப்படும் இந்த நஷ்டஈட்டுக் கொடுப்பனவுக்குரிய 38 லட்சத்து 10! ஆயிரம் ரூபாவுக்கான காசோலை யாழ். செயலக புனர்வாழ்வு புனரமைப்புக் கிளையில் இருந்து பிரதேச செயலகத்துக்கு கிடைத்துள்ளது. பிரதேச செயலக திட்டமிடல் பகுதியினர் அந்தந்த வங்கிகளுக்கு காசோலைகளை அனுப்பி வைத்துள்ளனர்.

கொடுப்பனவை பெறவுள்ளவர்கள் தத்தமது கிராம உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு ஜனவரி முதல் வாரத்தில் பணத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும் என திட்டமிடல் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக கொடுப்பனவை பெறவுள்ளவர்களின் விவரம் வருமாறு:-

சங்கரத்தை — 14 பேர், அராலி மேற்கு — 10 பேர், அராலி மத்தி — 33 பேர், அராலி கிழக்கு — 31 பேர், வட்டு. தெற்கு — 5 பேர், வட்டு. மேற்கு — 10 பேர், தொல்புரம் கிழக்கு — 20 பேர், தொல்புரம் மேற்கு 6 பேர். பொன்னாலை 3 பேர், மூளாய் — 17 பேர், சுளிபுரம் மேற்கு — 16 பேர், சுளிபுரம் மத்தி — 17 பேர், பனிப்புலம் — 9 பேர், சங்கானை கிழக்கு — 21 பேர், சங்கானை மேற்கு 33 பேர், சங்கானை தெற்கு — 9 பேர்.

16 கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளிலும் இருந்தே 254 பேர் 15 ஆயிரம் ரூபா இரண்டாம் கட்டக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளவுள்ளனர். [இ-க–175]

# பஸ் சேவை நிறுத்தம்

தென்மராட்சி, ஜன. 5

யாழ்ப்பாணத்திலிருந்து கிளாலி வரை நடத்தப்பட்டு வந்த பஸ் சேவை கடந்த பதினைந்து நாள்களாக நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் கிளாலி வாழ் மக்கள் தமது தேவைகளுக்காக எழுதுமட்டுவாழ் வரை நடந்து வர வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிளாலிக்கான பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டதையடுத்து இப்பகுதியில்சேவையில் ஈடுபட்டு வந்த தட்டிவான் சேவையும் நிறுத்தப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-117)


# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி.

# வரவு செலவுத் திட்டச் செய்தி

அன்புக்கினிய மக்களே!

1998 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் மூலம் வலி. கிழக்குப் பிரதேசத்தின் தலைமைப் பொறுப்பினை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய எமக்கு மக்கள் அளித்தார்கள். இப் பொறுப்பின் ஊடாக ஆண்டு தோறும் எமக்குக் கிடைக்கின்ற வருமானங்களைக் கொண்டு, இப் பகுதி மக்களுக்கு ஆற்ற வேண்டிய செயல் திட்டங்களை வகுத்து அதனூடாக வருடந்தோறும் அபிவிருத்திகளை மேற்கொண்டு வருகின்றோம். எமது வருமானங்களைக் கொண்டு செயற்படுத்தும் செயல் திட்டங்களே வரவு செலவுத் திட்டமாக முன்வைக்கப்படுகின்றது. இதன் அடிப்படையின் எமது சபையைப் பொறுப்பேற்றதன் பின் இரண்டாவது வரவு செலவுத் திட்டத்தினைச் சமர்ப்பிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

மேலும் 2000 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எமது பிரதேச மக்களுக்குச் செய்ய வேண்டிய சேவைகளையும் செயற்திட்டங்களையும் கருத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. எமது பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய், அச்சுவேலி ஆகிய இடங்களில் ஆயுள்வேத வைத்தியசாலைகள் நிறுவப்பட்டு, மக்களுக்கு வைத்திய சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் எமது பிரதேசத்தில் வசதிகள் அற்ற வாதரவத்தைக் கிராம மக்களின் நன்மை கருதி புத்தூரில் ஆயுள்வேத வைத்தியசாலை திறக்கப்பட்டுள்ளது. இதே போல் மிகவும் பின் தங்கிய மக்கள் வாழும் வேம்பிராய்ப் பகுதியிலும் ஆயுள்வேத வைத்தியசாலை திறக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பிரதேச சபை எல்லைக்குள் இலங்கை வங்கி, மக்கள் வங்கி இல்லாத காரணத்தால், மக்கள் தமது நாளாந்த வங்கி அலுவல்களுக்கு யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி ஆகிய இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. இதன் காரணமாக எமது அச்சுவேலிச் சந்தைக் கடையின் மேல்மாடிக் கட்டடத்தில் மக்கள் வங்கிக்கிளையைத் திறப்பதற்குச் சபை நிதியிலிருந்து கட்டடத்தைப் பூர்த்தி செய்து வங்கியை இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உரும்பிராய் சந்தியில் பல காலமாக இயங்கிய சந்தையை மீளப் புனரமைப்புச் செய்து, சந்தையைத் திறந்து உரும்பிராய் பட்டினத்தை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஐந்து பொது நூல் நிலையங்களுக்கும் ரூபா 500, 000/-க்கு மேல் நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இவ்வரவு செலவுத் திட்டத்தில் வறிய சிறார்களுக்கு போஷாக்கு உணவு வழங்குவதற்கும், வறிய மாணவர்களுக்குக் கண்ணாடி வழங்குவதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் வறிய சிறார்களின் கல்வி மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு மிகவும் வறுமைக் கோட்டுக்குக் கீழ்வாழும் பகுதியில் அமைந்துள்ள 10 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தம் ரூபா 500/- வீதம் வேதனம் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் எமது பிரதேசத்தில் விளையாட்டுக்களையும் கலைகளையும் ஊக்குவிப்பதற்காக ஏற்படும் செலவை ஈடுசெய்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வீதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கும் போதிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் மக்கள் சபைக்குச் செலுத்த வேண்டிய ஆதனவரி நிலுவை, வியாபார வரி, வாடகை மற்றும் ஏனைய வரிகளையும் செலுத்தி ஒத்துழைப்பு வழங்கினால் மேலும் மக்களுக்குச்சிறப்பாகச் சேவையாற்ற முடியும் என்பதை அறியத் தருகின்றேன்.

எமது சபையின் வளர்ச்சியில் பெரும் பங்கு ஆற்றிவரும் எமது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளருமான திரு. வி. கே. ஜெகன் அவர்களுக்கும் எமது சபை சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனவே 2000 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பயன் தரும் திட்டங்களும் சேவைகளும் அடங்கியுள்ளதால், இவற்றைச் செயற்படுத்துவதற்கு சபை நிதிகளில் மாத்திரமன்றி ஏனைய உதவி வழங்கும் நிறுவனங்கள் மூலமும், அரசநிதி மூலமும், மக்களின் பூரண ஒத்துழைப்புடனும் திட்டங்கள் நிறைவேற்றப்படுமென எதிர்பார்க்கின்றேன்.

செ. குகதாசன்
செயலாளர்

பூ. குணசிங்கம்
ஜே. பி. யு. எம்.
தவிசாளர்

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
03. 01. 2000

(சி/10480)

உதயன்

## காலத்தை வீணாக்கும்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளில், நடவடிக்கைகளில் ஒன்றாக, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறுவதற்கு வாறியாக சட்டந் திருத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

இப்போதுள்ள சட்டத்தின் பிரகாரம், குறிப்பிட்ட கட்சி ஒன்றின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட ஒருவர், இன்னொரு கட்சிக்கு மாறமுடியாது. இன்னொரு கட்சிக்கு மாறும் போது அவர் தமது எம். பி. பதவியை இழப்பார்.

அதனால் இனப்பிரச்சினைக்கு எந்தத் தீர்வைக் கொண்டு வந்தாலும் அதனை மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் இப்போதைய நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாத தடங்கல் நிலை உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த நான்கு எம். பிக்கள் ஆளும் கட்சிக்கு ஆதரவளிக்கிறார்கள். அவர்களைப் போல இன்னும் பதினைந்து பேரைத் தமது பக்கத்துக்கு இழுக்கலாம் என்று அரசாங்கத் தரப்பு நம்புகிறது. அதனைச் செயலாக்குவதற்கு இப்போதுள்ள சட்டத்தைத் திருத்த முயல்கிறது.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு வாக்குப் பலம் இல்லாத அரசாங்கத்தினால் சட்டத்தைத் திருத்துவது பெரும் கடினமான காரியம். அனேகமாக அதற்குச் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது இன்றியமையாதது ஆகிவிடும்.

கட்சி மாறுவதைத் தடுக்கும் சட்டத்தில் உள்ள சிறு ஓட்டையை — கட்சி மாறும் எம்.பி ஒருவர் அது சம்பந்தமான முடிவு எடுக்கப்படும் வரை ஒரிரு மாதங்கள் தொடர்ந்து பணியாற்றலாம் என்ற ஏற்பாட்டை — பயன்படுத்தியே அரசு இந்த முயற்சியில் இறங்க வுள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காணுமுகமாக எதிர்க் கட்சிகளையும் சேர்த்து தேசிய அரசாங்கம் அமைப்பது அரசாங்கத்தின் திட்டங்களில் முதலாவதாக இருந்தது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அதனைப் பெரிதாக ஆதரிக்க மாட்டாது என்பதனை அறிந்து கொண்டே, எம்.பிக்கள் கட்சி தாவுவதற்கு சட்ட வசதி செய்வதற்கு அரசு முயற்சிப்பதாகச் சொல்லப்படுகிறது.

இதற்கிடையில், தேசிய அரசு அமைப்பது சம்பந்தமாகவோ, இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒத்துழைப்புக் கோரியோ அரசாங்கம் உத்தியோக பூர்வமாகத் தமது கட்சியுடன் அரசு தொடர்புகொள்ளவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் கூறிக் கொண்டிருக்கின்றன.

ஒரு வழிமுறையை மட்டும் நம்பியிராது பல மாற்றுத் திட்டங்களைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு அரசாங்கம் முயல்வதில் தவறில்லை. ஆனால் ஒரு வழி என்றில்லாமல் பலதும் பத்தையும் செய்யமுயலின் காலம் வீணாகக் கழிந்து போகும்.

அரசாங்கமும் எதிர்க்கட்சியும் தீர்வுத் திட்டம் ஒன்றை ஒரே அணியாக நின்று முன் வைப்பதிலும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களும் அதற்கு இணக்கம் தெரிவிப்பதிலுமே இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண்பது தங்கியுள்ளது. இதனை மறக்காது எல்லாத் தரப்புகளும் செயற்படுவது அவசியம்.

## இடம்பெயர்ந்த மக்களுக்கு முல்லை. மாணவர்கள் உதவி

யாழ்ப்பாணம், ஜன. 5

யுத்த சூழ்நிலையினால் இடம்பெயர்ந்து பாடசாலைகள் மற்றும் சனசமூக நிலையங்களில் வாழும் மக்களுக்கு யாழ் பல்கலைக்கழக முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியம் வாரத்தில் இரண்டு நாள்களுக்கு காலை உணவை வழங்கி வருகின்றது.

யாழ்ப்பாண வெதுப்பக உரிமையாளர் சங்கம், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானம் ஆகியவற்றின் ஆதரவுடனும் அருட்நந்தை ஜெயக்குமாரின் ஆதரவுடனும் கடந்த 21 ஆம் திகதி முதல் வாரத்தில் இரண்டு நாள்களுக்கு காலை உணவினை ஒன்றியம் வழங்கி வருகின்றது.

இந்த உதவி நல்லூர் சாதனா வித்தியாலயம், நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம், திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, திருநெல்வேலி கம்பன் ச. ச. நிலையம் மற்றும் மகாத்மா ச. ச. நிலையம் என்பவற்றில் தங்கி உள்ள மக்களுக்கே வழங்கப்பட்டு வருகின்றது. (இ–க)

## மருந்து தட்டுப்பாடு

நெல்லியடி, ஜன. 5

மந்திகை மருத்துவமனையில் சலரோக கிளினிக்கில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு வழங்கப்படும் இன்சுலின் மற்றும் 'டயனில்' ஆகிய மருந்துகளுக்கு கடந்த இருமாத காலமாகத் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதனால், இங்கு சிகிச்சை பெறவரும் சலரோக நோயாளிகள், பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். (உ – 109)

## கரையோரப் பகுதிகளில் ஷெல் தாக்குதல் காரணமாக சீவல் தொழிலாளர் பாதிப்பு

வலி. வடக்கு, ஜன. 5

கரையோரப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஷெல் தாக்குதல்கள் காரணமாக சீவல் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடற்கரைப் பகுதிகளில் குறிப்பாக அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகளில் உள்ள தென்னை, பனை மரங்களில் இருந்து கள் இறக்கும் நடவடிக்கையில் அவர்கள் ஈடுபடமுடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம் —

அரியாலைப் பகுதியில் முள்ளி இராணுவ முகாமுக்கு அண்மையாக உள்ள இடங்களில் கள் எடுக்க வேண்டாம் என்று இராணுவத்தினர் அறிவுறுத்தி வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

இத்தகைய நடவடிக்கை காரணமாக சீவல் தொழிலாளர்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர். (இ-6-86)

## கராஜ் உரிமையாளர் கைது

மட்டக்களப்பு, ஜன. 5

கொழும்பு நகர மண்டப வளாகத்தில் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் தொடர்பாக களுவாஞ்சிக்குடிப் பகுதியில் உள்ள ''கராஜ்'' ஒன்றின் உரிமையாளர் விசேட புலனாய்வுத் துறையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

நவரட்ணம் கோகுலன் (வயது 27) என்பவரே கைது செய்யப்பட்டவராவார். (இ-7-21)

# சகல சௌபாக்கியங்களையும் வாரி வழங்கும் ஆஞ்சநேயர் பெருமானின் அசாத்திய சக்தி

சேவைக்கென்றே அவதரித்தவர் ஆஞ்சநேயர். ராமபிரானின் சேவையை மட்டுமன்றி தன் அடியார்களின் சேவைக்கும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர். அவர் மேற்கொண்ட காரியங்கள் எல்லாம் வெற்றியே.

மகாபண்டிதர். அடக்கத்தை அணிகலமாக உடையவர், வாக்கு சாதுர்யத்தில் வல்லவர், இராஜதந்திரத்தில் மகாசமர்த்தர், வீரத்தில் அவருக்கு நிகர் அவரே.

இன்றுள்ள அவலமான வாழ்க்கையில் நமக்கு ஊன்றுகோலாக இருக்கக்கூடியவர் ஆஞ்சநேயரே. புத்திபலம், மனோபலம், தைரியம் இவைகளுக்கெல்லாம் ஆதர்சமான மகாபுருஷர் அவர். இராமர் துயரத்தைப் போக்கியவர். சீதையின் வியாகூலத்தைத் துடைத்தவர். இலக்ஷ்மணனுக்கு உயிர் அளித்தவர். பரதன் உயிரையும் காப்பாற்றியவர். ஆகவே தம் கஷ்டங்களை நீக்க இவரைக் கெட்டியாகப் பற்ற வேண்டும்.

எப்படிப் பற்றுவது? 'ராம்' என்ற ஓரக்ஷர மந்திரம் ஒன்றே போதும். 'ரா' என்பது அஷ்டாக்ஷரத்திலுள்ள ஜீவனுள்ள எழுத்து. 'ம' என்பது பஞ்சாக்ஷரத்திலுள்ள ஜீவனுள்ள எழுத்து. இந்த வைஷ்ணவ - சைவ இணைப்புடன் பிந்துருபத்தில் சக்தியின் சின்னமும் இதில் பிணைந்துள்ளது. ஆகவே இவரைக்கொண்டே அவர்கள் அருளைப்பெறலாம். வால்மீகி, கம்பர், துளசிதாசர் எல்லோருமே அவரைப் பல விதங்களில் சிலாகித்திருக்கிறார்கள். இப்படிப் பெருமைமிக்க சிரஞ்சீவியாக நம்மிடையே வாழ்ந்துவரும் நவ வியாகரண பண்டிதரும் சர்வமந்திர தந்திர யந்திர ஸ்வரூபியும் எல்லா மதத்தினர்களாலும் சேவிக்கப்படுபவருமான ஸ்ரீமத் ஆஞ்சநேயர், பக்தர்களை ரக்ஷிப்பதற்காக சதாகாலமும் சித்தமாக இருக்கிறார். ஆனால் நாம் உலக வாழ்க்கையில் சிக்குண்டு பக்தி செய்யநேரம்

## இன்று ஆஞ்சநேய ஜயந்தி

இல்லாமல் தவிக்கின்றோம்; அல்லது பக்தி செய்யும் முறை தெரியாது திகைக்கின்றோம். இவரை தாய்மை உடையவராக தினமும் வழிபடலாம்.



மேலும் சனிக்கிழமை, வியாழக்கிழமைகளில் வழிபடுவது சிறந்தது.

வங்கமொழியில் இராமாயணம் எழுதிய கிருத்திவாஸர் அனுமனை சிவபெருமானின் அவதாரமாகக் கூறுகிறார்.

பட்டாபிஷேகத்திற்குப் பின் ராமர் விருந்து வைத்தார். தன் உயிரையே மீட்ட அனுமனுக்குப் பரிமாற சீதாதேவி தானே முன் வந்தாள். முதலில் பரிமாறிவிட்டு அன்னம் கொண்டு வருவதற்குள் இலையைக் காலி செய்துவிட்டார் அனுமார். இம்மாதிரி பல தடவை நடந்தது. தியான வலிமையால் சீதை ஓர் உண்மையை உணர்ந்தாள்.

உடனே அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. இப்பிக்ஷாண்டியைத் திருப்திப்படுத்துவது எளிதாயிற்று. அவனுக்கு பூரண திருப்தியை அளிப்பது ஊர்த்துவ முக அர்க்கியம். அனுமன் அறியா வண்ணம் அவர் பின்புறம் போய் ''நமசிவாய'' என்று கூறிக்கொண்டு வாயுபுத்திரன் தலையில் சிறிது அன்னமிட்டார். அஞ்சனை சுதன் பூரண திருப்தியடைந்தான். 'அனுமாருக்கு விருந்து' என்ற தனி சொர்க்கத்தில் கிருத்திவாஸர் இந்த அற்புத நிகழ்ச்சியை விவரிக்கிறார்.

இன்னொரு மகானான துளசிதாஸர் சங்கரனே ராமசேவையின் பொருட்டு ஆஞ்சநேய சுவாமியாக அவதரித்தார் என்று கூறியிருக்கிறார்.

வாயு மைந்தனை தியானித்துத் தொழுவோமானால் சகல காரியங்களும் எளிதில் கைகூடும். கஷ்டங்கள் விலகி சகல சௌபாக்கியங்களும் வந்தடையும். ஆஞ்சநேய மகாப்பிரபுவின் அனுக்கிரக சக்தி அசாத்தியமானது. சுவாமியின் அருள் துளை எமக்குக் கிடைத்து விட்டால் மலையைக் கூட கடுகாகத் தூக்கி விடலாம்; கடலைக் கூட கால்வாய் போலதாண்டி விடலாம்; உடலைக் கூட இலேசாக்கிக் கொண்டு ஆகாயத்தில் பறக்கலாம்.

இதெல்லாம் படிப்பதற்கும் எழுதுவதற்கும் நன்றாக இருக்கிறது. நடைமுறையில் சாத்தியப்படுமா என நினைக்கிறீர்களா? ஏன் சாத்தியமாகாது? நமக்கு வரும் பிரச்சினைகள் எல்லாம் மலையைப் போன்று, கடல் போன்று பூதாகாரமானவை தானே. மலைபோன்ற கஷ்டங்களைக் கடுகாகவும் கடல் போன்ற சோதனைகளைக் கால்வாய் ஆகவும் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேய வழிபாடு மாற்றிவிடும். சுவாமியைத் தொடர்ந்து வழிபட்டு வந்தால் நமக்குக் கிடைக்கும் பலன் இருக்கிறதே அதை அளவிட முடியாது. அறிவு விருத்தியாகும்; வலிமை ஓங்கும்; மனஉறுதி ஏற்படும்; அச்சங்கள் அகலும்; நோய் நொடி விலகும்; தெளிவு பிறக்கும்; நாவன்மை சிறக்கும்.

இப்படி அனைத்தும் வாழ்க்கையில் ஒன்றாக அமைவது மிகவும் கடினம். ஆனால் ஆஞ்சநேயரை வழிபட்டால் இவை அனைத்தும் ஒருங்கே நமக்குச் சித்திக்கும். தக்க தருணத்தில் காத்தருள்வார் ஆஞ்சநேயர்.

அனுமன் அன்பின் வடிவம்; அருளின் வடிவம்; தொண்டின் வடிவம் மிகப்பழைமையான காலத்திலிருந்தே இவர் போற்றி வழிபடப்பட்டு வந்திருக்கிறார். இவருக்குரிய சிறப்பு உற்சவமாக அனுமன் ஜயந்தி விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது. மார்கழி மூல அமாவாசையன்று தான் அனுமன் பிறந்தார், ஆஞ்சநேயர் பிறந்தது அருணோதய வேளையில்; சூரியனுடைய பொன்னிறக் கிரணங்கள் ஆகாயத்தில் பரவும் சமயம்; பறவைகள் இனிமையாகக் கூவி மனிதர்களை எழுப்பும் சந்தர்ப்பம். இந்தவேளையில் ஸ்நானம் செய்து சுத்தமான உடை உடுத்தி, தொட்டிலில் அனுமனை எழுந்தருளச் செய்து, பூஜை செய்வார்கள். இந்த ஜயந்தி தினத்தில் அனுமாருக்கு வெண்ணெய் சார்த்துவதும் வடைமாலை சார்த்துவதும் மிகச் சிறப்பானது ஆகும். தினந்தோறும் இவ்வாறு வழிபடலாம். வடை மாலை சார்த்தினால் நமக்கு எல்லாப் பலன்களும் கிட்டும். ஐம்பூதங்களில் முதன்மையானது காற்றே. அதுவே மற்றப் பூதங்களுடனும் தொடர்பு கொண்டுள்ளதால், காற்றுத் தேவனின் மகனான அனுமனை வணங்குவோர், அவர் திருவருளால் சகல நன்மைகளையும் பெற்றுத் திகழ்வதோடு, தீமைகளிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் இரட்சிக்கப்படுவார்கள்.

எனவே நாமும் இன்றைய ஆஞ்சநேயர் ஜயந்தி தினத்தில் மாருதியை வழிபட்டு அருள்பெற்று இன்பமடைவோமாக. ★

**சிவஸ்ரீ. இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்**
(பிரதம சிவாச்சாரியார், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்)

## நாளை

மார்கழி 22

வியாழக்கிழமை

திதி: அமாவாசை நள்ளிரவு 12.24 வரை

நட்சத்திரம்: மூலம் காலை 7.03 வரை

அமாவாசை விரதம்

சுபநேரம்: 5.01—6.31

ராகுகாலம்: 12.31—2.01

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பிறருக்கு உதவி செய்வதன் மூலம் நீங்கள் உங்களின் சுமையைக் குறைத்துக் கொள்ளலாம்.

-பிரான்ஸ் கொயஸ்

# வாக்குரிமை தந்து 25 ஆண்டுகள்; ஆனால்உரிமைகள்இன்னும்இல்லை

## மலையக மக்கள் நிலை குறித்து சந்திரசேகரன்

கொழும்பு, ஜன. 5

வடக்கு — கிழக்கில் வாழுகின்ற தமிழ், முஸ்லிம் சமூகத்தவர்கள் முன்னர் அனுபவித்த அரசியல் உரிமைகளில் அரைவாசியைக் கூட தற்போது மலையக மக்கள் அனுபவிக்க முடியாத நிலையில் உள்ளனர். எனவே தான் இனிவருகின்ற காலங்களிலாவது மலையக் மக்களின் வாழ்வில் ஓர் அரசியல் மாற்றத்தினை உருவாக்க வேண்டுமென்ற அரசியல் வேட்கையோடு மலையக மக்கள் முன்னணி செயலாற்றத் துவங்கியுள்ளது.

டயகம அக்கரபத்தனைப் பகுதி பொது மக்கள் மத்தியில் உரையாற்றும் போது, மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா நாடாளுமன்ற உறுப்பினருமான பெ. சந்திரசேகரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சந்திரசேகரன் மேலும் பேசுகையில் —

1977 ஆம் ஆண்டுக்கு பின்னர் தான் நாம் அரசியல் உரிமைகள் பெற்றோம் என கூறப்படுகின்றது 77 இல் முதலாவதாக வாக்களித்த ஓர் இளைஞனுக்கு இன்று 40 வயதாகியிருக்கும். குடும்பமாகி குழந்தைகளுடன் இருக்கும் அந்த இளைஞன் ஏறக்குறையக் கால் நூற்றாண்டு காலமாக மாகாண சபை, பிரதேச சபை, நாடாளுமன்றம், ஜனாதிபதித் தேர்தல் எனப் பல தேர்தல்களில் பல உறுதி மொழிகளை நம்பி வாக்களித்திருப்பான். ஆனால் இந்த கால் நூற்றாண்டுக்குள் நாம் ஏதாவது அரசியல் உரிமைகளைப் பெற்றுள்ளோமா என்று சிந்தித்தால் ஏமாற்றமே மிஞ்சும்.

ஆனால் யுத்த பூமியாகக் கொதித்துக் கொண்டிருக்கும் வடக்கு — கிழக்கில் வாழுகின்ற மக்களின் நிலையைப் பாருங்கள் அரச காரியாலயங்களில் உயர் பதவியிலிருந்து சிற்றூழியர் பதவிகள் வரை அனைத்துப் பதவிகளிலும் தமிழ் பேசும் மக்களே இருக்கின்றார்கள். தங்களது எந்தப் பிரச்சினையையும் தமிழ் மொழியிலேயே செய்துகொள்ளும் சலுகைகள் உள்ளவர்களாக அவர்கள் உள்ளார்கள். அனால் எமது மக்கள் தமிழ் மொழியில் ஒரு தந்தியை அனுப்பும் வசதி கூட மலையகத்தில் உள்ள தபால் கந்தோர்களில் இல்லை.

இந்த நிலைமை தொடர்ந்தால் இன்னும் 25 வருடங்களில் இலங்கையின் மற்ற சிறுபான்மை இனங்களாக வாழும் வடக்கு - கிழக்கு தமிழர்களும் முஸ்லிம் மக்களும் அதீத வளர்ச்சி கண்டு முன்னேறி விடுவார்கள். ஆனால் நாம் — 'எமக்கு வாக்குரிமை கிடைத்தது' என்ற ஒரு சுலோகத்தை மாத்திரம் உச்சரித்துக் கொண்டு பின்தங்கிய சமூகமாகவே வாழ்ந்து கொண்டிருப்போம்.

நாம் அரசியல் வாழ்வில் அடியெடுத்து வைக்கும் போது எம்மிடம் அமைச்சர்கள் இல்லை; எம்.பி கள் இல்லை; மாகாண சபை — பிரதேச சபைகளில் அங்கத்தவர்கள் இல்லை. ஆனால் மக்கள் எம்முடன் இருந்தார்கள்.

அதே மக்கள் சக்தியை நம்பித்தான் நாம் அமைச்சர் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு மக்கள் முன் வந்துள்ளோம். அமைச்சர் பதவியில் இருந்து சாதிக்க முடியாததை மக்கள் சக்தியால் சாதிப்போம்.

இப்படி அவர் கூறினார். (இ)

# சிவத்தமிழ்ச்செல்வியின்பவளவிழா நாளை மறுதினம் ஆரம்பம்

நல்லூர், ஜன. 5

சிவத்தமிழ்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் பவளவிழா நிகழ்வுகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெற உள்ளன.

முதலாம் நாள் நிகழ்வுகளுக்கு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தலைமை வகிப்பார்.

முதல் நாள் நிகழ்வுகள் வருமாறு:

காலை 6 மணிக்கு ஸ்நபன அபிஷேகம் 7 மணிக்கு பூசை இடம்பெறும். தொடர்ந்து காலை 8.30 மணிக்கு சிவத்தமிழ்செல்வி அன்னையர் இல்லத் திறப்புவிழா இடம் பெறும்.

திறப்பு விழாவைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றல், திருமுறை ஓதல் இடம்பெறும். வரவேற்புரையை சட்டத்தரணி, பதில் நீதிவான் மு. சபாநாதன் நிகழ்த்துவார்.

மாலை ஆதீன கர்த்தா மகாராஜஸ்ரீ சு. து. சண்முகநாதக்குருக்கள், துர்க்காதேவி தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள், பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமம் ஸ்ரீ சித்ரூபானந்தா சுவாமிகள், யாழ். தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் அடிகள் ஆகியோரின் ஆசியுரையும் மல்லாகம் நீதிபதி இ. த. விக்கினராஜா, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் ஆகியோரின் வாழ்த்துரையும் பவளவிழா நாயகி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் முன்னுரையும் தலைமையுரையும் – இவற்றை அடுத்து யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் நா. சுப்பிரமணியஐயரின் சிறப்புரையும் கந்தபுராணச் சொற்பொழிவு நூல் வெளியீடும் இடம்பெறும்.

வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் உயர் வகுப்பு மாணவர்களுக்கு பாடசாலை உபகரணம் வழங்கல் நா. தவநாதனின் நன்றியுரை துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் அபிநயப்பாட்டு, நாட்டிய நாடகம் என்பனவும் இடம்பெறும். (இ-103)

# பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டோரின் விவரம்

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் முதலாம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

### சங்கானை

(124574 ஏ), (125063 ஏ), (125236 ஏ), (125236 பி), (125236 சி), (127034 ஏ), (127034 பி), (127034 சி), (127034 டி), (127034 ஈ), (127112 ஏ), (134385 ஏ), (134388 ஏ), (134508 ஏ), (134599 ஏ), (134708 ஏ), (134796 ஏ), (134796 பி)

### சாவகச்சேரி

(123659ஏ), (124888ஏ), (126100ஏ), (134890ஏ), (134902ஏ), (134902பி),

### கரவெட்டி

(121987ஏ), (122056ஏ), (122192ஏ), (122192பி), (122192சி), (125615ஏ), (125615பி), (125615சி), (125615டி), (127540ஏ), (127540பி), (127540சி), (127540டி), (127821ஏ), (132563ஏ), (132563பி), (132563சி), (132563டி), (133563ஈ), (132580ஏ), (132580பி), (132615ஏ), (132630ஏ), (132630பி), (132630சி), (132824ஏ), (132824பி), (132824சி), (132824டி), (132824ஈ), (132825ஏ), (132825பி), (132825சி), (132913ஏ), (132913பி), (132970ஏ), (132970பி), (132971ஏ), (132971பி), (132979ஏ), (132979பி), (132979சி), (132986ஏ), (132986பி), (133007ஏ), (133008ஏ).

### கோப்பாய்

(123723ஏ), (123724ஏ), (123725ஏ), (123726ஏ), (123727ஏ), (123728ஏ), (123729ஏ), (123730ஏ), (123731ஏ), (123732ஏ), (123733ஏ) (123734ஏ), (123735ஏ), (123735பி), (123736ஏ), (123745ஏ), (123745பி), (123746ஏ), (123747ஏ), (123748ஏ), (123749ஏ), (123750ஏ), (128751ஏ), (123753ஏ), (123754ஏ), (123755ஏ) (123756ஏ), (123757ஏ), (123758ஏ) (123759 ஏ), (123759 பி), (123761 ஏ), (123762 ஏ), (123762 பி), (123762 சி), (123762 டி), (123763 ஏ), (123764 ஏ), (123769 ஏ), (133784 ஏ) (123784 பி), (123784சி),

(123255 ஏ), (128263 ஏ). (128263 பி), (128272 ஏ), (133141 ஏ), (134357 ஏ),

### நல்லூர்

(122927 ஏ), (122927பி), (122927 சி), (122927 டி), (122927 ஈ), (124421 ஏ), (133089 ஏ), (133090 ஏ), (133142 ஏ), (133161 ஏ), (133161 பி), (133161சி), (133161 டி), (127111 ஏ), (127289 ஏ), (127289 பி), (127289 சி), 127310 ஏ), (127311 ஏ), 127311 பி), (134375 ஏ), (134570ஏ), (134570 பி), (134611 ஏ), (134611 பி), (134612 ஏ), (134631 ஏ), (134631 பி), (134631 சி), (134657 ஏ), (134660 ஏ), (134661 ஏ), (134734 ஏ), (134734 ஈ), (134742 ஏ), (134753 ஏ),

### பருத்தித்துறை

(120163 ஏ), (125813 ஏ), (127566 ஏ) (127566 பி), (132755 ஏ), (132755 பி), (132916 ஏ), (132916 பி).

### சண்டிலிப்பாய்

(123621 ஏ), (123621பி), (127205 ஏ), (127243 ஏ), (127243 பி), (127331 ஏ), (134384 ஏ), (134431 ஏ), (134431 பி), (134431 சி), (134479 ஏ), (134439பி), (134514 ஏ), (134533 ஏ), (134539 ஏ), (134593 ஏ), (134593 பி), (134593 சி), (134607 ஏ), (134639 ஏ), (134654 ஏ), (134693 ஏ), (134712 ஏ), (134712 பி), (134713 ஏ), (134736 ஏ)' (134751 ஏ), (134751 பி), (134764 ஏ) 134764 பி), (134841ஏ), (134841பி),

### தெல்லிப்பழை

(121577ஏ), (121577பி), (121738ஏ), (123591ஏ) (127027ஏ), (127184ஏ), (127414ஏ), (144568ஏ). (134647ஏ), (134673ஏ). (134674ஏ), (134674பி), (134675ஏ), (134728ஏ), (133193ஏ), (133193பி) (133193சி) (124479ஏ), (124479பி), (124975ஏ), (125302ஏ), (127087ஏ), (127087பி), (127087சி), (127238ஏ), (127238பி), (127238சி) (127364ஏ), (134435ஏ), (134435பி), (134435சி), (134464ஏ), (134464பி), (134510ஏ), (134585ஏ), (134585பி), (134585சி), (134610ஏ), (134628ஏ), (134633ஏ), (134665ஏ), (134668ஏ), (134707ஏ) (134739ஏ), (134739பி), (134762ஏ)' (134762பி), (134762சி), (134762டி), (134806ஏ), (134806பி), (134806சி), (134807ஏ), (134814ஏ).

## படையினர் தேடுதல்

மூளாய், ஜன. 5

வட்டுக்கோட்டை, மூளாய், தொல்புரம் ஆகிய பகுதிகளில் படையினர் நேற்று முன்தினம் திடீர் தேடுதல்களை நடத்தினர்.

மேற்படி பகுதிகளுக்குள் திடீரென அதிக எண்ணிக்கையில் நுழைந்த படையினர் அப்பகுதிகளில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இந்த நடவடிக்கையின் போது பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை.

(இ-6-99)

## புத்தாயிரம் ஆண்டை ஒட்டி மர நடுகை

நெடுந்திவு, ஜன. 5

புத்தாயிரம் ஆண்டை முன்னிட்டு நெடுந்திவு பிரதேச சபை நெடுந்திவின் சகல பகுதிகளிலும் மரக்கன்றுகளை நட்டுள்ளது.

நெடுந்திவு பிரதேச சபைத் தலைவர் அ. வெ. அரியநாயகத்தின் தலைமையில் பிரதேச சபையில் இடம்பெற்ற இந்த வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட முன்னாள் கிராம அலுவலர் நா. கணபதிப்பிள்ளை பிரதேச சபை வளவில் மரக்கன்று ஒன்றை நட்டு நிகழ்ச்சியைத் தொடக்கிவைத்தார்.

[இ-6-111]

# சங்கானை, சுன்னாகம் ஊடாக சாவகச்சேரிக்குப் பஸ் சேவை

## நேற்று முன்தினம் முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 5

சங்கானை, சுன்னாகம் ஊடாக சாவகச்சேரிக்கான வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் (775 இலக்க பாதை) பஸ்சேவை நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆரம்பவிழாவில் சங்கானை மகாவித்தியாலய அதிபர் ச. கைலாசநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பஸ் சேவையை ஆரம்பித்து வைத்தார்.

சங்கானை ஸ்ரீ பாரதி சன சமூகநிலையத் தலைவரும் சமாதான நீதிவானுமான க. வ. அரசன் இது தொடர்பான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார்.

(இ-15)

# கடந்த ஆண்டில் மட்டும் வறுமையால் பதினாறு பேர் அச்சுவேலியில் தற்கொலை!

வலி. கிழக்கு, ஜன. 5

கடந்த ஆண்டில் மட்டும் அச்சுவேலிப் பகுதியில் வறுமையினால் வாழ்க்கையினை வெறுத்து 16 பேர் தற்கொலை செய்துள்ளதாக அச்சுவேலி பொலீஸ் நிலைய முறைப்பாட்டுப் பதிவேட்டிலிருந்து வந்துள்ளது.

இந்தப் பகுதிகளில் வறுமை காரணமாக மனவிரக்தியுற்ற பலர் மது போதைக்கு அடிமையாகியதும்—

தற்கொலை செய்து கொண்டதும்—

முறைப்பாடுகள் மூல தெரிய வந்துள்ளது.

(உ-180)

# 5 ஆயிரம் ரூபாவுக்கு குறைவாகப் பெறுவோரின் ஓய்வூதியத் தொகையை அதிகரிக்குமாறு கோரிக்கை

மூளாய், ஜன. 5

அரசாங்க ஓய்வூதியர்களின் ஓய்வூதியத் தொகையை அதிகரிக்கும்படி வலிகாமம் மேற்கு அரச ஓய்வூதியர் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மாதாந்தம் 5 ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்ட தொகையை ஓய்வூதியமாகப் பெற்றுக் கொள்ளும் ஓய்வூதியர்களின் நலன் கருதியே இக்கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

அனைத்து ஓய்வூதியர்களும் குறைந்த பட்சம் 5 ஆயிரம் ரூபாவையாவது பெற்றுக் கொள்ளும் வகையிலேயே இக்கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற இச் சங்கத்தின் கூட்டத்தில் மேற்படி விடயம் தொடர்பாக ஆராயப்பட்டது. வாழ்க்கைச் செலவு அதிகரித்துச் செல்வதனால் குறைந்த ஓய்வூதியம் பெறுபவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர் எனவே இதுவரை காலமும் 5 ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்ட தொகையை ஓய்வூதியமாகப் பெற்றுவரும் அனைத்து ஓய்வூதியர்களுக்கும் குறைந்த பட்சம் ஐயாயிரம் ரூபாவையாவது ஓய்வூதியமாக வழங்க வேண்டும் என்று மேற்படி சங்கம் தனது கோரிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு மேற்கொள்ளப்படவிருக்கும் ஓய்வூதிய அதிகரிப்புத் திட்டத்தின் போது மேற்படி விடயத்தையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளும்படியும் இச் சங்கம் கேட்டுள்ளது.

(இ-6-99)

## கடற்படையினரின் அடையாள அட்டை

நெடுந்திவு, ஜன. 5

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட சரவணை, அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளில் உள்ள மக்கள் கடற்படையினரின் விசேட அடையாள அட்டைகளைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

(6-111)

# ரஷ்யத் தூதரகத்தின் மீது பெய்ரூட்டில் தாக்குதல்

லெபனானின் தலைநகர் பெய்ரூட்டில் உள்ள ரஷ்யத் தூதரகம் மீது நேற்று முன்தினம் தீவிரவாதிகள் ரொக்கெட்டுக்கள் மற்றும் தானியங்கித் துப்பாக்கிகள் என்பவற்றின் மூலம் தாக்குதல் நடத்தி உள்ளனர்.

## செச்சினியாவில் நடைபெறும் தாக்குதலுக்கான எதிரொலி

பெய்ரூட்டின் மையத்தில் முஸ்லிம்கள் அதிகமாகவாழும் முஷராங் பகுதியில் அமைந்திருந்த ரஷ்யத் தூதரகம் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

தூதரகத்துக்கு எதிரே இருந்த மாடிக் கட்டடம் ஒன்றில் மறைந்திருந்த தீவிரவாதிகள் தூதரகத்தை நோக்கி தானியங்கித் துப்பாக்கிகளால் சுட்டதுடன் ரொக்கெட்டுக்களாலும் தாக்கினர். இந்தத் தாக்குதலால் தூதரகக் கட்டடத்துக்குப் பெரும் சேதம் ஏற்பட்டது.

தாக்குதலை அடுத்து லெபனான் பொலிஸாரும், படையினரும் உடனடியாக அந்த இடத்துக்கு விரைந்தனர். தூதரகம் அமைந்திருந்த வீதியை போக்கு வரத்துக்குத் தடை செய்தனர். தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளை அவர்கள் பதுங்கி இருந்த கட்டடத்தை விட்டு வெளியேற்ற படையினர் முயன்ற போது அவர்களுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் சண்டை இடம்பெற்றது. இரு படையினர் காயமடைந்தனர்.

செச்சினியாவில் ரஷ்யப் படையினர் நடத்திவரும் தாக்குதல்களின் எதிரொலியாக தூதரகம் மீதான தாக்குதல் இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் யார் என்பதை சரியாக இனம் காண முடியவில்லை என்று பெய்ரூட் பொலீஸார் தெரிவித்தனர்.

பெய்ரூட் தூதரகம் மீதான தாக்குதலை அடுத்து ரஷ்யா இஸ்லாமிய நாடுகளில் உள்ள தனது தூதரகங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்தி உள்ளது.

(இ-6-9)




## பாகிஸ்தான் சிறைகளில் இருந்து 10 ஆயிரம் கைதிகள் விடுதலை!

இஸ்லாமாபாத், ஜன. 5

புனித றம்ழான் பெருநாளை முன்னிட்டு பாகிஸ்தான் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 10ஆயிரம் கைதிகளை பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்கள் விடுதலை செய்துள்ளனர்.

பாகிஸ்தானில் உள்ள மாநிலங்களிலேயே மிகப் பெரிதான பஞ்சாப் மாநிலத்தின் சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த கைதிகளே விடுவிக்கப்பட்டுள்ளனர். சிறு சிறு குற்றங்களுக்காக தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டவர்களுக்கே இவ்வாறு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது என்று பாகிஸ்தான் சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் சிறைகளில் பெரும் இட நெருக்கடி இருப்பதாக அனைத்துலக மனித உரிமைக் குழுக்கள் ஏற்கனவே கண்டனம் தெரிவித்து வந்தன. இந்த நிலையில் கைதிகள் விடுதலை செய்யப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க விடயம் என்று மனித உரிமைக் குழுக்கள் தெரிவித்துள்ளன.

(இ-6-9)

## பாகிஸ்தானை பயங்கரவாத நாடாக அறிவிக்க வேண்டும்

### வாஜ்பாய் தெரிவிப்பு

புதுடில்லி, ஜன. 5

பாகிஸ்தானை ஒரு பயங்கரவாத நாடாக உலக நாடுகள் அறிவிக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் வாஜ்பாய் கேட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு பூனேயில் செய்தியாளர்களிடம் பேசும் போது அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாகிஸ்தானை ஒரு பயங்கரவாத நாடாக அறிவிப்பதற்காக இந்தியா பாடுபடும். இந்தியாவில் பயங்கரவாதச் செயல்களை பாகிஸ்தான் தீவிரமாகத் தூண்டிவிட்டு வருவதால் அதனைப் பயங்கரவாத நாடாக உலக நாடுகள் அறிவிக்க வேண்டும்.

இது தொடர்பான நடவடிக்கைகளில் அமெரிக்கா முன்மாதிரியாகச் செயற்பட வேண்டும். இந்தியன் எயார் லைன்ஸ் விமானம் கடத்தப்பட்ட பின்னர் நிகழ்ந்த சம்பவங்களைப் பார்க்கும் போது அது பாகிஸ்தானின் ஆதரவுபெற்ற பயங்கரவாதத்தின் ஒரு பகுதி என்பது அரசுக்குக் கிடைத்துள்ள தகவல்களில் இருந்து தெரியவந்துள்ளது.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்

(இ-6-9)

## வீடு தீப்பற்றியதில் 7 பேர் உயிரிழப்பு

டோக்கியோ, ஜன. 5

ஜப்பானில் மரத்தினால் அமைக்கப்பட்ட இரண்டு மாடி வீடு ஒன்று தீப்பற்றிக் கொண்டதில் 4 குழந்தைகள் உட்பட 7 பேர் உடல் கருகிப் பலியாகினர்.

(இ-6-4)

## பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியின் செல்வாக்குச் சரிவடைகின்றது

மணிலா, ஜன. 5

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ஜோசப் எஸ்ராடாவின் செல்வாக்கு மக்களிடம் தொடர்ந்து சடுதியாகக் குறைவடைந்து வருவதாக நாட்டில் அண்மையில் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் 78 சதவீதமாக இருந்த எஸ்ராடாவின் ஆதரவு ஒக்ரோபர் மாதத்தில் 56 சதவிதமாகவும் டிசெம்பர் மாதத்தில் 46 சதவிதமாகவும் சடுதியாகக் குறைவடைந்துள்ளது என்று அந்தக் கருத்துக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் ஜனாதிபதியின் ஆதரவு குறைவடைவதற்கான காரணம் என்ன என்பது குறித்து எந்தத் தகவலையும் அந்தக் கருத்துக் கணிப்பு வெளியிடவில்லை.

அதிகரித்து வரும் எண்ணெய் விலையும் நாட்டின் அரசமைப்பை மாற்றுவதற்கு தான் மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கு எதிராகத் தகவல் தொடர்பு சாதனங்கள் நடத்தி வரும் பிரசாரமும் தனது செல்வாக்குச் சரிவதற்குக் காரணமாக இருக்கலாம் என்று ஜனாதிபதி யோசப் எஸ்ராடா தெரிவித்துள்ளார்.

(இ-6-9)

## இஸ்ரேல் - சிரியா பேச்சுத் தோல்வி!

நியூயோர்க், ஜன. 5

இஸ்ரேல் — சிரியா ஆகிய நாடுகளுக்கிடையில் நேற்று முன்தினம் ஆரம்பமான பேச்சுக்கள் தோல்வி அடையும் நிலையில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு நாடுகளுக்கும் இடையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் மேற்கொண்ட மூன்று முயற்சிகள் தோல்வி அடைந்து விட்டதாக நியூயோர்க்கில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பேச்சுக்களின் போது எந்தப் பிரச்சினை தொடர்பாக ஆராய்வது என்ற விடயத்தில் இரு நாடுகளுக்கும் இடையில் இணக்கம் ஏற்படவில்லை என்று பேச்சுக்கான ஏற்பாட்டாளர்கள் கூறினர்.

பாதுகாப்பு மற்றும் இரு நாடுகளிலும் இயல்பு நிலையைக்கொண்டு வருதல் ஆகியவை தொடர்பாக பேச்சு நடத்த வேண்டும் என்று இஸ்ரேல் வலியுறுத்தி வருவதாகவும்—

ஆனால் கோலான்குன்றுகளில் இருந்து இஸ்ரேலியப் படையினர் வாபஸ் பெறப்படுவது குறித்து பேச்சுக்களில் முதலில் ஆராய வேண்டும் என்று சிரியா கூறிவருவதாகவும்—

இதனால் பேச்சுக்கள் தோல்வியை நோக்கிச்சென்று கொண்டிருப்பதாகவும் — அமெரிக்க அதிகாரிகள் நேற்றுத் தெரிவித்தனர். (இ-6-9)

## நேபாளத்தில் பாக். தூதரக அதிகாரி கைது

காத்மண்டு, ஜன. 5

நேபாளத் தலைநகர் காத்மண்டுவில்கள்ளஇந்திய நாணயத்தை புழக்கத்தில் விட முயற்சி செய்த பாகிஸ்தான் தூதரக அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் உளவாளி ஒருவருடன் இந்தக் கள்ள நாணயம் தொடர்பாக அவர் பேரம் பேசிய போது கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டதாகப் பொலிஸார் கூறினார்.

(இ-6-9)

## காத்மண்டு செல்ல பயணிகள் தயக்கம்

காத்மண்டுவில் இருந்து புறப்பட்ட இந்தியன் எயார் லைன்ஸ் விமானம் கடத்தப்பட்டதை அடுத்து அந்த நாட்டுக்குச் செல்வதற்காக விமான டிக்கெட்டுக்கள் பதிவு செய்த பயணிகள் பலர் தமது பயணத்தை ரத்துச் செய்து வருகின்றனர்.

வெளிநாடுகளில் இருந்து நேபாளம் வருவதற்காக விமான டிக்கெட் பெற்றவர்களில் 25 சதவீதமானோர் உடனடியாகத்தமது டிக்கெட்டுக்களை ரத்துச் செய்ததாக விமானப்பயண ஏஜென்ட் நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

கடத்தல் நாடகத்துக்கு முன்னர் காத்மண்டுவுக்கு செல்வதற்கு எந்த விமான நிறுவனத்திடமும் டிக்கெட் பெறுவது பெரும் சிரமமானதாக இருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ரஜனி காந்தை நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

தமிழ் திரையுலக சுப்பர் ஸ்ரார் ரஜனிகாந்தை அடுத்த மாதம் 2 ஆம் திகதி நீதிமன்றில் நேரில் ஆஜராகுமாறு சென்னை நீதிமன்றம் ஒன்று உத்தரவிட்டுள்ளது.

மனோகரன் என்பவர் தாக்கல் செய்த சொத்துத் தொடர்பான மனு ஒன்றை விசாரணை செய்த நீதிபதி வி. ஆறுமுகம் மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார்.

ரஜனிகாந்துடன் மேலும் மூன்று பேரும் நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

(இ-6-9)

### இந்தியாவில் இருந்து

# விஸா முடிவடைந்த பாகிஸ்தானியர் உடனடியாக வெளியேற்றப்படுவர்

புதுடில்லி, ஜன. 5

விஸா காலாவதியான பின்னரும் இந்தியாவில் தங்கி உள்ள பாகிஸ்தானியர்கள் அனைவரையும் உடனடியாக நாட்டை விட்டு வெளியேற்றும் நடவடிக்கையை இந்திய அரசு மேற் கொண்டுள்ளது.

இந்தியன் எயார் லைன்ஸ் விமானம் கடத்தப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த விமானக் கடத்தல் நாடகத்துக்கும் பாகிஸ்தானுக்கும் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாகவும் இந்தியா குற்றம் சாட்டி வருகின்றது.

சட்டவிரோதமாகத் தங்கி உள்ள பாகிஸ்தானியர்கள் அனைவரையும் உடன் வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு இந்திய மத்திய அரசு மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

விமானக் கடத்தலுடன் பாகிஸ்தான் தொடர்புபட்டிருப்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உள்துறை இணை அமைச்சர் சி. எஸ். வித்தியாசாகர் ராவ் தெரிவித்தார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சுமார் 11 ஆயிரம் பாகிஸ்தானியர்கள் சட்டவிரோதமாகத் தங்கி உள்ளனர் என்றும்—

பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. இந்தியாவில் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து முழு அறிக்கை ஒன்றை வெளியிடுவதற்கு அரசு முடிவு செய்துள்ளது என்றும்— அவர் மேலும் தெரிவித்தார். (இ-6-9)

## அதி நவீன எதிர்ப்பு ஏவுகணை; உருவாக்க இந்தியா முயற்சி

புதுடில்லி, ஜன. 5

அமெரிக்கா அண்மையில் உருவாக்கியது போன்று அதி நவீன பலஸ்டிக் எதிர்ப்பு ஏவுகணைகளை உருவாக்குவதற்கு இந்தியா முயன்று வருகின்றது.

87 ஆவது இந்திய விஞ்ஞான மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய இந்தியப் பிரதமரின் அணு ஆயுதக் கொள்கை ஆலோசகர் டாக்டர் அப்துல் கலாம் இந்தத் தகவலை வெளியிட்டார்.

கண்டம் விட்டுக் கண்டம் பாயும் பலஸ்டிக் ஏவுகணைத் திட்டத்துக்கு போதுமான நிதி உதவி கிடைத்தால் அதனை உருவாக்க நாடு முயற்சி செய்யும்.

இந்தியாவின் முதலாவது இலக்கான போர் விமானம் இந்த மாதம் பரிசோதித்துப் பார்க்கப்படும். என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-6-9)

## ஈராக்கில் கடந்த ஆண்டு 6,234 குழந்தைகள் மரணம்

ஈராக்கில் கடந்த ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் மாதம் வரை 6 ஆயிரத்து 234 குழந்தைகள் போதிய மருத்துவ வசதிகள் இன்றி இறந்துள்ளதாக ஈராக் ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1991 ஆம் ஆண்டு முதல் ஈராக்மீது ஐ.நா. விதித்துள்ள பொருளாதாரத் தடை காரணமாக அங்கு மருந்து மற்றும் உணவுப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் குழந்தைகளுக்கு போதியளவுபோஷாக்குக் கிடைக்காததாலேயே இந்த நிலை ஏற்பட்டதுஎனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

சிவலிங்கம் சோமதி என்பவரின் தேசிய, விசேட அடையாளஅட்டை (706042911V-0903022826) என்பன யாழ். நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அ. சிவலிங்கம் C. T. B., ஊரெழு கிழக்கு, சுன்னாகம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (72330)

16/1, மருதடி ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசிக்கும் மவுண்பேட்டாஜீவ் மகிந்தன் ஆகிய எனது விசேட அடையாள அட்டை 0901012538) 1-1-2000 அன்று பருத்தித்துறை வீதிக்கும் நாவலர் வீதிக்கும் இடைப்பட்ட செட்டித் தெருவில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நாவலர் வீதி செட்டித்தெருச்சந்தியிலுள்ள பாப்பையா கடையில் ஒப்படைக்கவும். தகுந்தசன்மானம் வழங்கப்படும். (72338)

தம்பசிட்டி பா. பாலநாதன் என்பவரது தேசிய அ. அட்டை (இல. 762004046V) தம்பசிட்டிக்கும் நெல்லியடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பருத்தித்துறை ஓராம் கட்டை ராணி பேக்கரியில் ஒப்படைத்துதவவும். (72346)

பொன்னம்பலம் வீதி, காரைநகரைச் சேர்ந்த கந்தையா – சிவஞானம், திருமதி சிவஞானம் தையல்நாயகி ஆகியோரின் தேசிய அ. அட்டைகள் 31-12-99இல் காரைநகரிலிருந்து யாழ்ப்பாணம் சென்றபோது பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்துமேற்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (72349)

### இறைச்சிகோழி தேவை

இறைச்சிக் கோழிகள் தேவை, நல்ல விலை கொடுக்கப்படும். தொடர்பு: தனபாலசிங்கம் 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் விடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். [72352]

### ஜீ. எல். பீரிஸ் லண்டனுக்கு

கொழும்பு, ஜன. 5

கொழும்பு நகர மண்டப வளாகத்தில் கடந்த மாதம் 18 ஆம் திகதி இடம்பெற்ற குண்டுத் தாக்குலில் காயமடைந்த நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் மேலதிக சிகிச்சைக்காக நேற்று முன்தினம் லண்டன் பயணமானார். (இ-7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### சுப்பிரமணியம் ஜெயரத்தினம்

(ராசா)

தோற்றம் 10-03-1932 மறைவு 06-12-1999

அன்பின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் இருப்பிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
விளங்கிய எங்கள் இனிய ஐயாவே!
உங்கள் அன்பு முகம் பார்க்காமல்
ஆசை மொழி கேட்காமல்
ஆறிடுமோ எங்கள் மனம்?
இனி எப்பிறப்பில் காண்போம்?

ஐயா! உங்கள் ஆத்ம சாந்திக்காக நித்தமும் நாம் இறைவனை வேண்டுகின்றோம்.

எமது குடும்பத்தலைவரின் மரணச் செய்தி அறிந்து நேரிலும் வேறு வழிகளிலும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று 05—01—2000 புதன்கிழமை நிகழும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

- குடும்பத்தினர்

ஏழாலை மேற்கு. (72367)


## BEACON (யாழ்)

''விளக்கியதை விளக்குகிறேன்
மீண்டும் விளக்குகிறேன்''

கணக்கீடு

திரு. பாலவாசன்

A/L 99 Day Class

பங்குடைமை

ஆரம்பம்: 05 - 01 - 2000 9 AM

வாரத்தில் 10 மணித்தியால வகுப்பு

(72361)


## மரண அறிவித்தல்கள்

நயினாதிவு

### தியாகர் சின்னத்துரை

நயினை தியாகர் சின்னத்துரை காலமானார். இவர் தங்கம்மாவின் அன்புக்கணவரும், சிவப்பிரகாசம் (ஆசிரியர், நாமகள் வித்தியாலயம், கொக்குவில்), ஞானப்பிரகாசம் (அதிபர், கூமாங்குளம் த. க. பா. வவுனியா), வரலெட்சுமி, நாகலெட்சுமி, குணலெட்சுமி ஆகியோரின் தந்தையாரும் லோகாம்பிகை, மஞ்சுளா, சண்முகராசா, சோமசுந்தரம், கேசவநாதன் ஆகியோரின் மாமனாரும் ஜெயகுமரன் (Motor Traffic, Colombo- 5), நந்தகுமரன் (பொறியியலாளர், Edward Greasy&Co, Colombo), அநுரகுமரன் (4 ஆம் வருட மாணவன், மருத்துவ பீடம், யாழ்ப்பாணம்), விஜேகுமரன் (இறுதி ஆண்டு பொறியியல் பீடம், பேராதனை), கலைவாணி (ஜேர்மனி), சந்திரவதனி (ஜேர்மனி), தர்மகுலராசா (பிரான்ஸ்), சுமந்திரராசா (லண்டன்), சத்தியவாணி (பிரான்ஸ்), சாந்தலெட்சுமி (ஜேர்மனி), சத்தியபாமா, பாஸ்கரன், சிறீகரன், சாவித்திரி, சுதாகரன், கெங்காதரன் (ஹொலண்ட்), ஆரணி ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை நன்இன்று (5-1-2000) புதன்கிழமைநயினாதீவில் நடைபெறும். இந்த அறிவித்தலை சகலரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
T.S சிவப்பிரகாசம்,
(மகன்)
46, பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில்.

நயினாதிவு -7 (72339)

### சின்னப்பு தம்பிராசா

கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னப்பு தம்பிராசா கனடாவில் 02-01-2000 அன்று காலமானார்.

இவர் இரத்தினம்மாவின் (கனடா) அன்புக் கணவரும் சுலோசனாதேவி – பாலசுப்பிரமணியம் (ஆசிரியை - கனடா), சுகந்தாதேவி - கருணானந்தசிவம் (கனடா), ஸ்ரீ பற்குணன் (ஆசிரியர்), காலஞ்சென்ற வசந்தகுமாரன், பரமேஸ்வரன் (கனடா), தவநேசன் (ஜேர்மனி), நரேந்திரன் (கனடா), பாலகிருஷ்ணன்(கனடா), பாஸ்கரன்(கனடா), அனுராதா-நகரதன் (கனடா), ரூபினா-நற்குணசிங்கம் (கனடா), ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் காலஞ்சென்ற டாக்டர் செல்வநாயகத்தின் (குப்பான்) சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

தகவல்
த. ஸ்ரீபற்குணன் (மகன்)
கு. கருணானந்தசிவம் (மருமகன்)

கொக்குவில். (72347)

### கந்தசாமி ஞானசுந்தரம் (ஞானம்)

(அதிபர், நயினாதிவு ஸ்ரீ கணேச வித்தியாலயம்)

நயினாதீவைச் சேர்ந்த கந்தசாமி ஞானசுந்தரம் அவர்கள் நேற்று (04—01—2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, நாகரெத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் இராசம்மாவினதும், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை — விசாலாட்சியினதும் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சாந்தினி மற்றும் மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புக் கணவரும், பிருந்தா, காலஞ்சென்ற சாந்திகுமார் மற்றும் சாந்தசொரூபி, அச்சுதன், ஞானதீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், மகேஸ்வரி, கனகசபாபதி (கனடா), குகதாசன் (ஓய்வுபெற்ற வட்டாரக் கல்வி அதிகாரி), காலஞ்சென்ற காமாட்சிசுந்தரம், (ஓய்வு பெற்ற அதிபர்) மற்றும் சவுந்தரம் (கனடா), பராசக்தி, மகாலிங்கம் (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்), கமலாம்பிகை (ஓய்வு பெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற இராசரெத்தினம் (ஓய்வுபெற்ற சுங்க அதிகாரி) மற்றும் லலிதாம்பாள் (ஓய்வுபெற்ற ஆசிரியை), பரமலிங்கம் (செயலாளர், பொதுநிர்வாக அமைச்சு, வடக்கு — கிழக்கு மாகாணசபை), மகாதேவா (ஓய்வுபெற்ற தபாலதிபர்), வைத்திய கலாநிதி நவரட்ணராசா (தென்னாபிரிக்கா) ஆகியோரின்அன்புச் சகோதரரும் தியாகலிங்கம் (பிரான்ஸ்) அவர்களின் அன்பு மாமனாரும், நாகேஸ்வரி, பாலசுப்பிரமணியம், (நுவரேலியா), சோதீஸ்வரி (சுவிஸ்), சிவசுப்பிரமணியம் (கனடா), ஞானசுப்பிரமணியம் (ஞானம் புத்தக நிலையம், கொக்குவில்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(2000-1-6) வியாழக்கிழமைபி. ப. அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி ஞா. மங்களேஸ்வரி
(மனைவி)
திரு. சி. ஞானசுப்பிரமணியம்
(மைத்துனர்)

51ஆம் வட்டாரம்,
நயினாதீவு, (72362)


## BEACON DEGREE HALL

(வெலிங்டன் சந்தி - யாழ்நகர்)

## G.A.Q., 1ST in Com. - 2001

(வெளிவாரி - யாழ், பேராதனைப் பல்கலைக்கழகம்)

### ஜனவரி 09 ஞாயிறு ஆரம்பம்!

நேரம்: காலை 9. 00 மணி (ப. நே)

எமது விரிவுரையாளர் குழு:

| | | | |
|---|---|---|---|
| தமிழ் | — பிரபல விரிவுரையாளர் | வர்த்தகம் / முகாமைத்துவம் | — திரு. பசில் |
| இந்துநாகரிகம் | — திரு. M. R | பொருளியல் | — திரு. சண் |
| மெய்யியல் | — திரு. S. S. மனோகரன் | கணக்கீடு | — திரு. சிவராஜா |
| புவியியல் | — திரு. ஞானேஸ்வரன் | கணிதம் | — திரு. தவசேகர் |
| கிறிஸ்தவம் | — திருமதி சுனித்தா | சூழலியல் | — திரு. ஞானேஸ்வரன் |
| நாடகமும் அரங்கியலும் | — திரு. ஸ்ரீ கந்தவேள் | அளவையியல் | — திரு.S.S.மனோகரன் |

ஆங்கிலம் — திரு. பிறிற்றோ

குறிப்பு: பல்கலைக்கழகப் பதிவுகள் எம்மால் செய்து தரப்படும். புத்தாயிரமாம் ஆண்டு சலுகையாக அனுமதி பெறும் மாணவர்களிடமிருந்து அனுமதிக் கட்டணமோ வேறு முற்பணம் எதுவுமோ அறவிடப்படமாட்டாது.

(72357)

# தலைவர்கள் இல்லாத காலத்தில் தலைமையேற்று வழி நடத்தியவர்

## அமரர் ஸ்ரீ பாஸ்கரனின் சேவைக்குப் புகழாரம்

வலி தெற்கு, ஜன. 5

''1990 முதல் 1996 வரையான காலப் பகுதியில் வடபகுதி தமிழ் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான உகந்த தலைவர்கள் இல்லாத காலத்தில் தனி மனிதனாக நின்று தலைமை வகித்துப் பல தேவைகளை நிறைவேற்றியவர் அமரர் சு. ஸ்ரீபாஸ்கரன். திட்டங்களை முன்னெடுக்க பணத்திலும் பார்க்க மனத்துணிவும் தைரியமும் தேவை என்பதைத் தம் வாழ்க்கையால் உணர்த்தியவர் அவர்''.

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தலைவரும் மகாஜனக்கல்லூரி பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவருமான அமரர் சு. ஸ்ரீபாஸ்கரனின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

துணைவேந்தர் மேலும் கூறியதாவது:- ''மகாஜனக் கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பல்வேறு மட்டங்களிலும் வலியுறுத்தித் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுத்ததுடன் இடம்பெயர்ந்து இயங்கி வந்த மகாஜனக் கல்லூரியை அதன் பழைய இடத்தில் மீண்டும் இயங்கவைத்த பெருமையும் பாஸ்கரனையே சாரும். வலிகாமம் வடக்கை இராணுவத்தினரிடம் இருந்து எப்படியாவது மீட்க வேண்டும் என்பதற்காக முனைப்புடன் செயலாற்றியவர் பாஸ்கரன்— என்றார்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்குச் சங்கத்தின் உப-தலைவர் அ. வாமதேவன் தலைமை வகித்தார்.

யாழ்.பல்கலைக்கழக மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைப் பிரிவு மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது.

யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் உரையாற்றுகையில்கூறியதாவது:-

பல மனிதர்கள் ஒன்றிணைந்த மனிதப் பெட்டகமாகத் திகழ்ந்த பாஸ்கரன் தாம் சார்ந்த சமூகம் சிறப்புடன் வாழவும் வளரவும் கல்வியறிவு பெறவும் சுயநலம் எதுவும் இன்றிச் செயற்பட்டவர். அவர் நினைவுகள் நம் மத்தியில் இருக்கும் வரை அவர் அழிந்துபோகமாட்டார். அவர் முன்னெடுத்த பணிகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றவேண்டியது நமது கடமை என்றார்.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் அ. மகாலிங்கம் தமது நினைவுரையில் கூறியதாவது:-

பிரதேச சபையின் மூலம் சந்தர்ப்பங்களை பயன்படுத்தி வலிகாமம் வடக்கு பிரதேசத்தினதும் மக்களினதும் வளர்ச்சிக்காகப் பணியாற்றினார். தமிழர்கள் உரிமையுடன் வாழவேண்டும் என்பதில் இரண்டாம் கருத்தின்றி, இக் கட்டான நிலையிலும் கூட இந்த மண்ணில் இருந்து மக்களுக்குச் சேவையாற்ற விரும்பிய மனிதர் அவர்.

வலிகாமம் வடக்கில் உள்ள சகல மத வழிபாட்டு நிலையங்களுக்கும் சென்று மக்கள் வழிபாடாற்றவும் தத்தம் சொந்த இடங்களுக்கு சென்று குடியமரவும் அப் பிரதேச மக்களின் அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளவும் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யவும் தன்னால் முடிந்த பங்களிப்பை செய்துள்ளார். வடக்கு—கிழக்கு மக்கள் யாவருக்கும் சமய— சமூக— சாதி வேறுபாடுகள் இன்றி தொண்டாற்றினார்—எனக் கூறினார்.

யாழ். பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம், வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோசிலாமகேந்திரன், இலங்கை வங்கி முன்னாள் மாவட்ட முகாமையாளர் மூ. பாலசிங்கம் மற்றும் பிரம்மஸ்ரீ கு. ச. இரத்தினேஸ்வர ஐயர், அதிபர் ஆ. சி. நடராஜா, செ.செல்லத்துரை ஆகியோரும் நினைவஞ்சலியுரை நிகழ்த்தினர்.

(ஐ-152)

## இடம்பெயர்ந்த மக்களை பதிவு செய்யும் பணி ஆரம்பம்

மூளாய், ஜன. 5

அண்மைய இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து வலிகாமம் மேற்குப் பகுதியில் தங்கியுள்ளவர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அவ்வப் பகுதி கிராம உத்தியோகத்தர்களின் ஊடாக வலி. மேற்கு பிரதேச செயலகம் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இவர்களுக்கான உலர் உணவு விநியோகத்தை மேற்கொள்ளு வதற்கு வசதியாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வலி. மேற்குப் பகுதியில் தென்மராட்சி மற்றும் யாழ். கரையோரப் பகுதி மக்கள் பலர் இடம்பெயர்ந்து வந்து தங்கியுள்ளனர். இதுவரை தமது பதிவுகளை மேற்கொள்ளாத குடும்பங்கள் உடனடியாகத் தாம் தங்கியிருக்கும் பகுதி கிராம உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

(ஐ-99)

## பாடசாலை இடம் மாற்றம்

நெல்லியடி, ஜன. 5

வடமராட்சி, கிழக்கில் இயங்கி வந்த இரு பாடசாலைகள் நேற்று முன்தினம் தொடக்கம் தற்காலிகமாக செம்பியன்பற்று றோ.க.த.க. பாடசாலைக்கு இடம் மாற்றப்பட்டுள்ளன.

உடுத்துறை மகாவித்தியாலயம் மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலை ஆகியவையே இடம்மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றன.

(ஐ-109)

## சுயதொழில் ஊக்குவிப்பு கொடுப்பனவு

வலி. கிழக்கு ஜன. 5

வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மாதாந்த உதவிப்பணம் பெறும் ஒன்பது இளம் விதவைகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்புக்காக தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

இப்பிரதேச செயலர் பிரிவில் கோழி வளர்ப்பு, மாடு ஆடு வளர்ப்பு, தையல் போன்ற சுயதொழிலில் ஈடுபடும் இளம் விதவைகளுக்கே இந்த ஊக்குவிப்புப்பணம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பலருக்கு இத்தகைய உதவிகள் வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் எஸ் இராசலிங்கம் தெரிவித்தார். (உ-180)


நெல்லியடியில்.....

**LOGIC**

ஆசிரியர்:

திரு. க. தர்மதேவன்

புதியபிரிவுகள்

ஆரம்பம்:-

**09 - 01 - 2000**

ஞாயிறு 10-00 a. m.

A,L 2000 (II)

2001 (II)

2002


**Day Class**

★ புதிதாகக் கற்கும் மாணவர்களுக்கு விசேட வகுப்பு (ஆரம்பத்திலிருந்து)

கரவெட்டி, உபதபாலகத்துக்கு அருகில்.

(72321)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 26 — 01 — 1925

மறைவு: 17 — 12 — 1998

### திருமதி சின்னத்துரை இராசம்மா

திதி: 05-01-2000

ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள்
நினைவலைகள் எம்மை விட்டகலாது!
உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்**

அல்வாய் கிழக்கு.

(72320)

## திறந்த பல்கலையில் பயில 488 பேர் யாழ். பிரிவில் பதிவு

வலி. தென்மேற்கு, ஜன. 5

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிரிவில் புதியஆண்டில் கற்கை நெறியைத் தொடர்வதற்கு நானூற்றி 88 மாணவர்கள் பதிவு செய்துள்ளனர் என்று யாழ். பிராந்திய இயக்குநர் ச. ஆ. ஞானேந்திரன் தெரிவித்தார்.

சிறு வணிக முகாமைத்துவத்துக்கு — 74 பேரும்—

டிப்புளோமா முகாமைத்துவத்துக்கு — 123 பேரும்—

டிப்புளோமா பொறியியல் தொழில் நுட்பத்துக்கு— நூறு பேரும்—

கணனி பொறியியல் துறைக்கு—மூவரும்—

கல்வியியல் மானி துறைக்கு ஐம்பத்தொரு பேரும்—

சட்டத்துக்கு — 109 பேரும்—

பட்டப்பின் கல்வி டிப்புளோமாவுக்கு 28 பேரும்— பதிவு செய்துள்ளனர்.

மேலும் 2 ஆயிரம் ஆண்டில் திறந்த பல்கலைக்கழக தலைமையலுவலகத்தினால் புதிதாக ஆரம்பிக்கப்படும் கற்கை நெறிகளையும் யாழ். பிராந்திய நிலையத்தில் தொடர்வதற்கு வசதியளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (உ-185)

## 18 வயது இளைஞர் பலி!

## புத்தாண்டைக் கொண்டாட துப்பாக்கி வேட்டுத் தீர்ப்பா?

### ஜோசப் எம். பி. ஜனாதிபதிக்கு 'பக்ஸ்'

மட்டக்களப்பு, ஜன. 5

மட்டக்களப்பு — இருதயபுரத்தில் கடந்த சனியன்று— புத்தாண்டு பிறந்த வேளை பொலீஸார் மேற்கொண்ட துப்பாக்கிவேட்டுக்கு 18வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

இருதயபுரம் வாசியான இராசசிங்கம் சூரியப்பிரகாஸ் என்ற இளைஞரின் மரணம் சம்பந்தமாக ஜோசப்பரராஜசிங்கம் ஜனாதிபதிக்கு பக்ஸ் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புதுதாண்டு பிறக்கும் நேரத்தில் பாதுகாப்புப் படையினர் தமது நிலைகளிலிருந்து துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்ப்பது வழமையான நடைமுறை போல் இருக்கின்றது.

பாதுகாப்புத் தரப்பினரின் இத்தகைய செயற்பாடுகள் சட்டவரம்புகளுக்கு அப்பாற்பட்டது. இதன் காரணமாகவே இருதயபுரத்தில் பொதுமகன் ஒருவர் பலியான அதிர்ச்சியான துக்ககரமான இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த வருடமும் புத்தாண்டு பிறந்த நேரத்தில் இருதயபுரம் பொலீஸ் காவல் நிலையத்தில் இருந்து தீர்க்கப்பட்ட துப்பாக்கி வேட்டுக்கு வாலிபர் ஒருவர் காயமடைந்தார்.

எனவே இத்தகைய சம்பவங்கள் இனிவரும் காலங்களிலாவது இடம்பெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இதற்கான பணிப்புரை உடனடியாக விடுக்கப்படல் வேண்டும்.

அத்துடன் உயிரிழந்த இளைஞரின் குடும்பத்துக்கு நஷ்டஈடு வழங்கப்படவேண்டும் — என்றுள்ளது.

(உ-21)

## நீங்காத நினைவில் 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 26 — 08 — 1922

உதிர்வு: 06 — 01 — 1998

### திருமதி திரேசம்மா கனகராணி ஆழ்வாப்பிள்ளை

எங்களுக்கு ஒளி விளக்காய்த்
திகழ்ந்த திருவிளக்கே அம்மா!
ஆண்டு இரண்டு சென்றதம்மா
ஒரு கணப்பொழுதில்
ஆறவில்லை எம் துயர்!
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி
மீளாப் பயணம் சென்ற தாயே!
உங்கள் நினைவு எம் நெஞ்சை
விட்டு அகலாதம்மா!

அன்னாரின் ஆத்மசாந்திக்காக மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் நாளை (06-01.2000) வியாழக்கிழமை காலை 6–30 மணிக்கும் கரவை புனித மரியன்னை ஆலயத்தில் 08-01-2000 சனிக்கிழமை காலை 6–30 மணிக்கும் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

நுகவில், கரவெட்டி.

தகவல்:- ஆ. பிரான்சிஸ் (மகன்)
மக்கள் வங்கி,
யாழ்ப்பாணம்.

(72315)

கொழும்பு நகர மண்டப வளாகக் குண்டுத் தாக்குதல்

# ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த 15 பேர் மீது விசாரணை

கொழும்பு, ஜன. 5

கடந்த மாதம் 18 ஆம் திகதி கொழும்பு நகர மண்டப மைதானத்தில் ஜனாதிபதியை இலக்கு வைத்து நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த 15 பேரை இரகசியப் பொலீஸார் விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளனர்.

தற்கொலைக் குண்டுதாரியான பெண் இந்த மைதானத்துக்குள் பிரவேசித்தது எப்படி என்பது குறித்து விசாரணைகள் நடைபெறுகின்றன.

பாதுகாப்புப் பகுதியில் ஏற்பட்ட கவனயீனம் இதற்குக் காரணமா என்பது குறித்தும் விசாரிக்கப்படுகிறது.

இந்த இறுதிக் கூட்டத்துக்கு வருகை தந்த பல அரசியல்வாதிகளும் இரகசியப் பொலீஸாரின் விசாரணைக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தக் குண்டு வெடிப்புத் தொடர்பாக ஆராய்வதற்கு விசேட இரசாயனபரிசோதகர்கள் வெளிநாடு ஒன்றிலிருந்து வருகைதந்துள்ளனர். ஜா – எலவில் இடம் பெற்ற குண்டு வெடிப்புத் தொடர்பாகவும் இவர்கள் ஆராய்வார்கள்.

(இ–சி–4)


A/L DAY CLASSES 99

ஆரம்பம்: 06–01–2000 (காலை 8 மணி)

A/L 2002

ஆரம்பம்: 08–01–2000

விபரங்களுக்கு: S. அருள் நங்கை

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(72341)



NAVALY

HEMA TELECOM

24 HOURS ABSOLUTE SERVICE

Local -- 070 - 212676

IDD -- 0094 - 70 - 212676

S. RAMESH

Pulavar Road, Navaly North.

(C/10482)



விலைஸ் கல்வி நிலையம்

சுன்னாகம்.

2002 A\L

கலை. வர்த்தக, கணித, உயிரியல்

வகுப்புகள் ஆரம்பம்: 09 – 01 – 2000

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. சண் |
| கணக்கீடு | — திரு. கொலின் |
| வர்த்தகம் | — திரு. நந்தீஸ் |
| தமிழ் | — திரு. லிங்கம் |
| அளவையியல் | — திரு. சுரேஸ் |
| இந்துநாகரிகம் | — திரு. பாலகிருஷ்ணன் |
| புவியியல் | — திரு. சங்கர் |
| நாடகமும் அரங்கியலும் | — திரு. சத்தியா |
| இரசாயனவியல் | — திரு. K. S. சர்மா |
| பௌதிகவியல் | — பிரபல ஆசிரியர் |
| இணைந்த கணிதம் | — திரு. ரவி |
| உயிரியல் | — திரு. கெங்காதரன் |

அனுமதிக்கு முந்துங்கள்.

- நிர்வாகம்

(72344)


## கைத்தொழில் பொருள்காட்சி

நவாலி, ஜன. 5

வடக்கு—கிழக்கு மாகாண தொழிற்றுறை திணைக்களம் மாவட்ட மட்டத்தில் பொருள்காட்சி ஒன்றினை விரைவில் நடத்துவதற்கு முன்வந்துள்ளது.

இதில் யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் கைத்தொழிலாளர்கள் உட்பட அனைத்து மட்ட கைத்தொழில் முயற்சியாளர்களும் பங்கு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றிய மேலதிக விவரங்களைப்பெற விரும்புவோர் யாழ். செயலகத்திலுள்ள தொழிற்றுறை திணைக்கள மாவட்ட அலுவலகத்தின் தொழிற்றுறை அலுவலரைச் சந்தித்து அவற்றைப் பெற்றுக் கொள்ளலாமென்று தெரிவிக்கப்படுகிறது. (இ-100)

## நூற்றாண்டு விழா

அச்சுவேலி, ஜன. 5

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி ஸ்தாபகர் சேர் சிற்றம்பலம் ஏபிரகாம் காடினர் நூற்றாண்டு விழாவும்—கல்லூரி பரிசளிப்பு விழாவும் நாளை வியாழக்கிழமை காலை அதிபர் அருட்சகோதரி மேரி எத்தல்லீலா தலைமையில் நடைபெறும்.

சிற்றம்பலம் மண்டபத்தில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் வணபிதா ஜே.ஆர்.ஈ. செல்வராசா அடிகளாரும் கௌரவ விருந்தினராக யாழ். கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் என். வரதராசாவும் கலந்து கொள்வர். (க-11)


A/L PHYSICS 2002

Personal Class

ஆசிரியர்:

திரு. சண் [B.Sc.]

ஆரம்பம்:

09 – 01 – 2000

ஞாயிற்றுக்கிழமை

(பி.ப. 4 மணி)

இடம்:

410, K.K.S. ROAD, யாழ்ப்பாணம்.

(72343)


# புகையிலைச் செய்கையில் தீவக விவசாயிகள் ஆர்வம்

வேலணை, ஜன. 5

வேலணை, சரவணை, நாரந்தனை ஆகிய பகுதிகளில் விவசாயிகள், புகையிலைச் செய்கையில் முழு மூச்சாக ஈடுபட்டு வருகின்றனர்.

பருவ மழை தற்பொழுது சற்று ஓய்ந்திருப்பதனால் விவசாயிகள் தமது விளைநிலங்களைச் செப்பனிட்டு புகையிலை நாற்றுக்களை நடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் அதிக அளவிலான விவசாயிகள் புகையிலைச் செய்கையில் ஈடுபட்டுள்ளதால் தோட்ட வேலைகளுக்காக கூலியாட்களை ஏற்பாடு செய்வது மிகவும் சிரமமாக உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். அத்தோடு கூலியாள் ஒருவரின் நாள் சம்பளமும் 200 ரூபாவிலிருந்து 250 ரூபா வரை உயர்ந்துள்ளது.

(உ–167)

## கிணற்றில் வீழ்ந்து மரணம்

கோப்பாய், ஜன. 5

கிணற்றில் தவறுதலாக வீழ்ந்த ஒருவர் மரணமானார். சிவலிங்கப்புளியடியைச் சேர்ந்த கந்தையா கிருஷ்ணராஜா (வயது 46) என்பவரே மரணமானவர் ஆவார்.

(இ-6-72)

## இராஜினாமா

வடமராட்சி, ஜன. 5

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் ரெலோ உறுப்பினர் செல்லப்பா பத்மநாதன் தனது உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

தனது இராஜினாமா தொடர்பாக யாழ். தெரிவத்தாட்சி அலுவலருக்கு அவர் கடிதம் அனுப்பிவைத்துள்ளார்.

(உ–173)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் பகுதிநேர ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றும் திரு. சி. சிவப்பிரகாசம் ஆசிரியர் அவர்களின் தந்தையாரான

தி. சின்னத்துரை

அவர்கள் காலமானதையிட்டுத் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது பாடசாலைச் சமூகத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா / கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்

(72348)



## வண்ணை கோம்பையன் மணல் மயான பரிபாலன சபை வருடாந்தப் பொதுக்கூட்டம்

வண்ணை கோம்பையன் மணல் மயான பரிபாலன சபையின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 23-01-2000 ஞாயிற்றுக்கிழமை பகல் 1.00 மணிக்கு (புதிய நேரம்) மேற்படி மயான மடத்தில் நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல்

★ தேவாரம்
★ தலைவர் உரை
★ செயலாளர் அறிக்கை
★ கணக்கறிக்கை
★ புதிய நிர்வாகிகள் தெரிவு
★ பிற விடயங்கள்
★ நன்றியுரை
★ தேவாரம்

குறிப்பு: ஆயுள் சந்தா உறுப்பினர்களுக்கு மேற்படி கூட்டத்துக்கான தனிப்பட்ட அழைப்புகள் அனுப்பி வைக்கப்படும். ஆண்டுச் சந்தா உறுப்பினர்களும் புதிதாக உறுப்புரிமை பெற விரும்புபவர்களும் 22-01-2000 சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு முன்னர், பொருளாளர், 193/4, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உரிய படிவத்தைப் பெற்று அதற்கான பணத்தைச் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்.

ஆண்டுச் சந்தா: ரூபா 10.00
ஆயுள் சந்தா: ரூபா 100.00

மு. குறிப்பு: வண்ணார்பண்ணை, கொக்குவில் மேற்கு ஆகிய பகுதிகளை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட 18 வயதுக்கு உட்படாதவர்கள் இப்பரிபாலன சபையில் உறுப்புரிமை பெறத் தகுதியுடையவர்கள்.

| | |
|---|---|
| கலாநிதி க. குணராசா | ந. நந்தகுமார் |
| தலைவர் | செயலாளர் |
| 82, பிறவுண் வீதி, | 520, கஸ்தூரியார் வீதி, |
| யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம். |
| (சி/10483) | 05—01—2000 |



விற்பனையாகின்றன!

லீலா — 2000

சித்திரக் கலண்டரில் முன்னோடிகளான

லீலாவின்

சித்திர பஞ்சாங்க நாள் கலண்டர்கள்

பஞ்சாங்க மாத கலண்டர்கள்

உங்கள் தேவைகளுக்கு

உதயன் பணிமனை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# சமுர்த்தி முகாமையாளர்களாக நியமிக்கப்பட்ட 41 பேர் விவரம்

## நியமனக் கடிதங்கள் இன்று வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளில் சமுர்த்தி முகாமையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள 41 பேருக்கான நியமனக் கடிதங்கள் நேற்று பக்ஸ் மூலம், யாழ். செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

நியமனம் பெற்றுள்ள 41 பேரையும் இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் புதிய உயர் கலைக் கல்லூரியில் கூடுமாறு வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் ரி. சந்திரகாசன் கேட்டுள்ளார்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் இன்று வழங்கப்படவுள்ளன.

நியமனம் பெற்றவர்களின் பெயர் விவரம் அவர்களது உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக:-

### நெடுந்தீவு

★ குலசேகரம்பிள்ளை கருணாநிதி — நாரந்தனை வடக்கு.

★ கனகசபை கௌரிதேவி — 12 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

### வேலணை

★ நாகரட்ணம் நகுலராணி — வேலணை மேற்கு.

★ சுப்பிரமணியம் சசிகலா — வேலணை கிழக்கு.

★ இராசரத்தினம் மகேஸ்வரி — 5 ஆம் வட்டாரம் நயினாதீவு.

### ஊர்காவற்றுறை

★ அழகையா அறிவரசி — மத்தியூஸ் றோட், யாழ்ப்பாணம்.

★ மிறோன் லியோனியா லீனஸ் ரட்ணம் — கரம்பன் தெற்கு.

★ மேரி விஜயநந்தினி நல்லையா — வலந்தலை, காரைநகர்.

### யாழ்ப்பாண நகர்

★ மரியதாஸ் கியூமன் — மத்தியகிழக்கு வீதி, குருநகர்.

★ சர்வலோஜினி திருச்செல்வம்—கந்தகோட்டம் சித்தன்கேணி.

★ திருநாவுக்கரசு யோகேந்திரன் — மணற்தறை லேன், கந்தர்மடம்.

★ ஆன்ராணி ஜே. பிறிற்றோ - மத்திய கிழக்கு வீதி, குருநகர்.

★ வசந்தி ஜெயக்குமார் — ஆனந்தன் வடலி வீதி, அரியாலை.

★ ராகினி கந்தையா — பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

### நல்லூர்

★ தியாகராச சந்திரகாசன் — கந்தசாமி கோவிலடி, இணுவில்.

★ இராசையா புஷ்பலாதேவி — பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

★ நடராசா சிவகுமார் — பூதவராயர் வீதி, திருநெல்வேலி கிழக்கு.

★ இராமன் ஜெயதாஸ் — முனியப்பர் கோவிலடி, கோண்டாவில் மேற்கு.

### சண்டிலிப்பாய்

★ கந்தசாமி குமாரவேல்— கந்தசாமி கோவிலடி, இணுவில்.

★ செல்லத்துரை நகுலேஸ்வரி — ஈஞ்சடி, சுதுமலை வடக்கு.

★ நடராசா சுஜீந்திரராசா — கற்பொக்கணை, சுன்னாகம்.

### சங்கானை

★ சரோஜாதேவி சபாநாயகம் — மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.

★ சிவலோஜினி செபஸ்திநாதன்ராசா — தொல்புரம்.

★ குமரேஸ்வரி சுந்தரலிங்கம் — ஆலோலை லேன், வட்டுக்கோட்டை தென்மேற்கு.

### உடுவில்

★ புஷ்பலோஜினி கந்தசாமி —கற்பகப் பிள்ளையார் கோவிலடி, உடுவில் கிழக்கு.

★ ஆனந்தகௌரி ஜெயக்குமார் — மஞ்சத்தடி இணுவில்.

★ நடராசா காசிவேந்தன் — இணுவில் கிழக்கு.

### தெல்லிப்பழை

★ பரமேஸ்வரி அமபிகைபாகன் — கே. கே. எஸ். வீதி, மல்லாகம்.

★ ஜெபந்தி அந்தோனி ராசநாயகம் — மணற்புலம், அளவெட்டி.

★ செந்தில்வாணி செல்லத்துரை — அலுக்கை, அளவெட்டி.

★ ஜமுனா அருள்ராஜ் — டச்றோட், அளவெட்டி வடக்கு.

### கோப்பாய்

★ பொன்னம்பலம் சுகந்தன்.

★ விஜயராஜா நீலாயினி.

### சாவகச்சேரி

★ திருமதி நா. நந்தகுமாரன்.

★ ஆறுமுகம் உமாதேவி.

★ முருகேசு திவ்வியபாலன்

★ செல்வி சி. யோகராசா

★ பத்மநாதன் சுகிதா

### மருதன்கேணி

★ சச்சிதானந்தம் பிரேமராஜ்

★ பரஞ்சோதி பாலகரன்

★ அப்புத்துரை ரவிச்சந்திரன். (இ-15)


# கணக்கீடு

NEW SCIENCE COLLEGE

கன்னாதிட்டி. யாழ்ப்பாணம்,

A/L 99 DAY CLASS

ஆரம்பம் 05-01-2000 10.00 a. m

A/L 2001 இலங்கை கணக்கீட்டு நியமம்

ஆரம்பம் 11-01-2000 4.P. M

ஆசிரியர் திரு. சி. தவா (72370)



# ரெலிபோன் விற்பனைக்கு

பனசொனிக் 1லைன், 2லைன், கனைக்சன் பெட்டி வயர், தேவையான அளவுகளில்பின் அடித்துக் கொடுக்கப்படும் மற்றும் பக்ஸ் 680 கனோன் 1215 போட்டோஸ்ரெற் மெசின்ரோணர் அதற்குரிய உதிரிப் பாகங்கள் தேவையான அளவில் லெமனேற்றிங் கவர் வகைகள், பிலிம்றோல், றேடியோ, ஓடியோ, விடியோ கசட், ரோச் பற்றறி, மணிக்கூடு, மணிக்கூட்டு பற்றறி வகைகள் யாவும் பெற்றுக்கொள்ளலாம்.

(பிலிம்ரோல் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.)

செல்வம் ஸ்ரோர்ஸ்,

இல. 330 ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

(72365)



# கண்ணீர் அஞ்சலி

யா/கோண்டாவில் சி. சி. த.க. பாடசாலையின் பிரதி அதிபர்

திருமதி மனோன்மணி குலசிங்கம்

அவர்களின் அன்புத் தாயாரும்

எமது பாடசாலையின் பழைய மாணவர்

திரு. இராஜலிங்கம் குலசிங்கம்

(அதிபர்—ஊரெழு கணேச வித்தியாசாலை)

அவர்களின் அன்பு மாமியாருமான

திருவாட்டி தங்கரத்தினம் நாகரத்தினம்

அவர்கள் இறைபதம் எய்தியமை குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

முன்னாள் அதிபர், அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

கோண்டாவில். (72373)


# இரு கப்பல்களில் தபால்கள் வரும்

இன்று காங்கேசன்துறைக்கு வரவுள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 98 தபால் பொதிகள் எடுத்து வரப்படவுள்ளன.

இதேகப்பலில்குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 105 தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை—

நாளைகாங்கேசன்துறைக்கு வரவுள்ள 'லங்கா முடித்த' கப்பலிலும் குடாநாட்டுக்கான 952 தபால் பொதிகள் எடுத்து வரப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-10)

# தடுப்புமுகாமுக்கு அதிகாரி விஜயம்

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரியும் சட்டத்தரணியுமான என். ஜீவேஸ்வரா இன்று காங்கேசன்துறை கைதிகள் தடுப்புமுகாமுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடவுள்ளார். (ஐ-10)

# கூ. சங்கத்தில் மண்எண்ணெய்

நவாலி, ஜன. 5

மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்தின் 21 கிளை நிலையங்கள் மூலமும் சங்க எல்லைப்பரப்பில் வதியும் குடும்பங்களுக்கு வாரந்தோறும் 5 லீற்றருக்கு மேற்படாமல் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகின்றது.

சங்க எரிபொருள் நிலைகத்தில் தனியார் வியாபாரியள் மண்ணெண்ணெயை கொள்வனவு செய்து அதிக விலைக்கு விற்று கொள்ளை லாபம் ஈட்டுவது இதன் மூலம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (இ-6-100)

# கடைகள் திறந்திருந்தன

யாழ்ப்பாணம், ஜன. 5

குருநகர் பொதுச் சந்தையில் நேற்றுக் கடைகள் அனைத்தும் திறந்து வழமை போன்று வியாபாரம் நடைபெற்றதாக குருநகர் வர்த்தக சங்கத்தினர் தெரிவித்தனர்.

பொதுச் சந்தையில் குத்தகையாளர்களினால் வியாபாரிகளிடமிருந்து அதிகவரி அறிவிடப்படுவதாகத் தெரிவித்து அதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் கடந்த ஞாயிறு, திங்கள்ஆகியஇரண்டு தினங்களும் அங்குள்ள கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன.

நேற்றுக் கடைகள் யாவும் திறக்கப்பட்டதைத்தொடர்ந்து மக்கள் தமது பொருள்கள் கொள்வனவில் ஈடுபட்டதாகவும் அதிகமானவர்கள் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

# துறைமுகத் தொழிலாளி காயம்

நெல்லியடி, ஜன. 5

பருத்தித்துறைத் துறைமுகத்தில் பொருள் இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள 'மேர்க்கண்டி' கப்பலில் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளி ஒருவர் மீது பொதி ஒன்று வீழ்ந்ததால் அவர் காயமடைந்தார்.

நேற்று நண்பகல் 1-30மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த முருகேசு நவரத்தினசாமி (வயது 45 — சுப்பர்மடம்) என்ற தொழிலாளி மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-3-109)


வணிகப் பெருமக்களுக்கு!

2000 ஆம் ஆண்டுக்கு உங்கள் பெயர், விலாசங்களை அச்சிட்டு வழங்குவதற்கு

மனேச்மன், டெஸ்க்

மற்றும்

பொக்கற் டயறிகளை

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். கொள்வனவு தொகைக்கு ஏற்ப விசேட கழிவு வழங்கப்படும்.

சிவா நறுமணப் பூங்கா,

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T; P. NO. 2567

★ குறிப்பு: சந்திரத்து சந்திக்கு அருகில். [72387]



# யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

'பிறின்சஸ்காஷ்', 'அஸ்ரோறியா'

கப்பல்களில் பொருள்கள் ஏற்றிப் பாதிக்கப்பட்டவர்த்தகர்களுக்கும் 2000ஆம் ஆண்டு கொழும்பிலிருந்து பொருள்களைக் கப்பலில் கொண்டுவர உத்தேசித்துள்ள வர்த்தகர்களுக்குமான

# அறிவித்தல்

''பிறின்சஸ்காஷ்'', ''அஸ்ரோறியா'' கப்பல்களில் பொருள்கள் ஏற்றிப் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கும் 2000 ஆம் ஆண்டு கொழும்பிலிருந்து பொருள்களைக் கப்பலில் கொண்டுவர உத்தேசித்துள்ள வர்த்தகர்களுக்குமான கலந்துரையாடல் 2000—01—06 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு (புதிய நேரம்) யாழ். வணிகர் கழகப் பணிமனையில் நடைபெறும். மேற்குறிப்பிட்ட கப்பல்களில் பொருள்கள் ஏற்றிப் பாதிக்கப்பட்ட சகல வர்த்தகர்களும் உங்கள் நஷ்டஈடு சம்பந்தமாக ஆராய இருப்பதால் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

இல.27, நவீன சந்தை (மேல்மாடி),
யாழ்ப்பாணம். (சி/10499



# கண்ணீர் அஞ்சலி

யா/ நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட வித்தியாலய முதல்வர்

கந்தசாமி ஞானசுந்தரம்

அவர்களின் திடீர் மறைவையிட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைந்துள்ளோம். அன்னாரின் மறைவையிட்டு அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா நயினை அம்பாளின் பாதம் சேர இறைவியை வேண்டுகின்றோம்.

— முதல்வரின் இழப்பு —
கண்களில் வெள்ளம் தந்தது.

நலன்புரிச் சங்கம்,
வலயக்கல்வி அலுவலகம்,
தீவகம்.

வேலணை. (சி/10500)

## 133 அடி உயர வள்ளுவர் சிலை



உலகப் பொதுமை கண்ட வள்ளுவனுக்கு தமிழ்நாடு கன்னியாகுமரியில் அமைக்கப் பட்டிருக்கும் பிரமாண்டமான - 133 அடி உயர - சிலையையே படத்தில் காண்கிறீர்கள்.

கடந்த முதலாம் திகதி - புத்தாயிரமாம் ஆண்டு பிறந்த போது - நடுநிசிவேளை - தமிழக முதல்வர் மு.கருணாநிதி இந்தச் சிலையைத் திறந்து வைத்தார். (ஐ)

## கடலில் மூழ்கிய மாஹோ கப்பலின் பொருள்கள் கரை ஒதுங்குகின்றன

யாழ்ப்பாணம்,ஜன.5

மாதகல், திருவடிநிலை கடற்கரைகளில் எண்ணெய் பரல்கள், காகிதாதிகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் போன்றவை கடந்தசில நாள்களாக கரையொதுங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறை துறைமுகப் பகுதியில் டிசெம்பர் 21ஆம் திகதி கடலில் மூழ்கிய 'மாஹோ' கப்பலில் ஏற்றிவரப்பட்ட பொருள்களே இவ்வாறு கரையொதுங்குவதாகத் தெரியவருகிறது.

இக்கப்பலில் யாழ்.செயலகம், யாழ்.கல்வித்திணைக்களம், யாழ்.பல்கலைக்கழகம், 'உதயன்' நிறுவனம் உட்பட தனியார் வர்த்தகர்களுக்கென ஏற்றிவரப்பட்ட 3ஆயிரம் மெற்றிக் தொன் பொருள்களும் இறக்க முடியாத நிலையில் கப்பலுடன் கடலில் மூழ்கியது தெரிந்ததே. (ஐ-5-9)

## ஜனாதிபதிக்கு கண்தானம் வழங்க விரும்பும் நபர்

கொழும்பு,ஜன.5

கடந்த 18ஆம் திகதி இடம்பெற்ற குண்டுவெடிப்பில் ஒரு கண்ணில் பார்வை இழந்த ஜனாதிபதிக்கு தேவை ஏற்படின் தனது கண்ணைத் தானம் செய்ய வடமத்திய மாகாணத்தைச் சேர்ந்த ஒருவர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

மடாத்கம ஹெரவை என்ற இடத்தைச் சேர்ந்த ராஜபக்ஷ முதியங்கனாவ டிங்கிரிபண்டார என்ற இந்த நபர் சிறிலங்கா சுதந்திரக்கட்சிப் பிரமுகர் மகிந்த அபயசிங்க மூலம் தமது விருப்பத்தை ஜனாதிபதிக்கு தெரிவித்துள்ளார்.

கண் மாற்று சத்திர சிகிச்சைக்கான செலவுகள் முழுவதையும் தாமே ஏற்றுக்கொள்வதாகவும் -

டிங்கிரி பண்டார கூறியுள்ளார்.

குண்டுத்தாக்குதலில் காயமடைந்த ஜனாதிபதியின் ஒரு கண் பார்வையை இழந்திருப்பதும் -

மேலதிக சிகிச்சைக்காக அவர் அமெரிக்கா செல்ல இருப்பதும் தெரிந்தவையே. (ஐ-4)

## யாழ்ப்பாணத்தில் மேல் நீதிமன்றம்?

யாழ்ப்பாணத்தில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களை ஆஜர் செய்வதற்கு வசதியாக மேல் நீதிமன்றம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நீதிமன்றத்திற்கென மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவர் நியமனம் செய்யப்பட்டு உடனடியாக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட இருப்பதாகவும் தெரியவந்தது.

யாழ்ப்பாணத்தில் கடந்த பல வருடங்களாக மேல்நீதிமன்றம் இயங்காத காரணத்தினால் கொலை வழக்குகள் பல முடிவுறாதிருப்பதுடன் 15 வருடத்திற்கு மேற்பட்ட வழக்குகளும் விசாரணைகள் எதுவுமின்றிகிடப்பில் போடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படும் சந்தேக நபர்கள் அநுராதபுரம் நீதிமன்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டுவருவதால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேல் நீதிமன்றம் இங்கு இயங்க ஆரம்பித்ததும் மேற்படி குறைபாடுகள் நீங்கிவிடும் என்று நீதித்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேல் நீதிமன்ற அலுவலகம் குருநகர் கடற்கரை வீதியில் தற்போது இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

### கண்ணி அகற்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டு விடுமுறைக்காக கடந்தமாதம் தமது நாட்டுக்குத் திரும்பியிருந்தனர்.

இம்மாத நடுப்பகுதியில் அவர்கள் மீண்டும் இங்கு வந்து பணியைத் தொடர ஏற்பாடாகியுள்ளது.

இவர்களுக்குப் புறம்பாக மேலும் பல நிபுணர் குழுக்கள் இம்மாத இறுதியில் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றன.

மிதிவெடிகள் இருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ள கோப்பாய், யாழ்நகர், நல்லூர்,தெல்லிப்பழை, உடுவில் ஆகிய பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்படும். புல்,பூண்டுகள் உள்ள இடங்களில் கண்ணிவெடிகளை அகற்ற வசதியாக விசேட உபகரணங்களும் இம்மாத 'இறுதியில் இங்கு வந்து சேரவிருக் கின்றன. (ஐ-3-5)

### நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளவர்களுக்கும் அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவு வழங்கிவரும் தமிழ்க்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் அமைச்சரவையில் இடம் வழங்க வேண்டும் என்று வேறு சில சிரேஷ்ட அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் கோரி வருவதாகவும் -

அரசாங்க வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

இன்று கூடும் அமைச்சரவை இவை குறித்து விரிவாக ஆராயும் என்று அமைச்சர் அலவிமௌலானா தெரிவித்தார்.

உடனடியாகப் பொதுத்தேர்தல் நடக்கும் வாய்ப்பு இல்லை என்றும், அமைச்சரவை மாற்றம் உடனடியாக இடம்பெறவே வாய்ப்பு உள்ளது என்றும் அவர் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார். (ஐ-3)

### யுத்தத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டன்,கனடா, நோர்வே, ஹொலண்ட், ஜேர்மனி உட்பட 10க்கும் மேற்பட்ட நாடுகளின் தூதரகப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

ஐ.தே.க. பொதுச்செயலாளர் காமினி அத்துக்கோரளவும் உடன் இருந்தார்.

வெளிநாட்டு ராஜதந்திர பிரதிநிதிகளிடம் ரணில் பின்வருமாறு எடுத்துச் சொன்னார் என்று அறியவருகிறது.

விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தப் போவதாக அரசு கூறிவருகிறது. அது நடக்கப்போவதில்லை.

வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதற்காகவே பேச்சு என்ற பூச்சாண்டி எழுப்பப்பட்டுள்ளது.

வெளிநாட்டு உதவிகளைப் பெற்று அரசாங்கம் யுத்தத்தையே தொடரப் போகின்றது. நீங்கள் வழங்கும் உதவிகளை யுத்தத்திற்கு பயன்படுத்தினால் தெற்கில் மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்தி பணிகள் எதனையும் செய்ய முடியாதநிலையே உருவாகும்.

அத்துடன் அரசாங்கம் மோசடிகள் நிறைந்த தேர்தல் ஒன்றை நடத்தி முடித்துள்ளது. இதன்மூலம் ஆட்சிக்கு வந்து பேச்சு என்று கூறி உலகை ஏமாற்ற முனைந்துள்ளது. (ஐ-3)

### ராணுவப் பேச்சாளர் கடமையேற்பு

கொழும்பு,ஜன.5

இராணுவப் பேச்சாளராக பிரிகேடியர் பாலித பெர்னாண்டோ நேற்றுப் பதவியேற்றுள்ளார்.

நாளை நடைபெறும் செய்தியாளர் மாநாட்டில் அவர் கலந்துகொள்வார்.

### உரும்பிராயில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

சிலையை நிறுவுவதற்காக 511 ஆவது படையணியிடம் வலி.கிழக்கு பிரதேசசபை அனுமதி கோரியது என்றும்-அதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் -

ஈ.பி.டி.பி அமைப்பின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் வி.கே.ஜெகன் தெரிவித்தார்.

இந்தச் சிலையை அமைப்பதற்கு வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரிடம் ஏற்கனவே அனுமதி பெறப்பட்டிருந்தது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-3)

### ஷெல் வீச்சு

கொழும்புத்துறை கிழக்குப் பகுதியில் நேற்று முற்பகல் 11.00 மணியளவில் அடுத்தடுத்து நான்கு ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

அந்தப்பகுதியில் உள்ள தென்னந் தோட்டத்தில்ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

அரியாலைகிழக்கு, அறுகுவெளிப் பகுதிகளில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் ஹெலியில் இருந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. (ஐ-3-30)


எமது இன்றைய புதிய வீடியோ C.D வெளியீடு

சரத்குமாரின்

பாட்டாளி

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.

(C/10501)

A/L 2002
[கலை வர்த்தகப் பிரிவுகள்]

ஆரம்பம்
ஜனவரி 8
சனிக்கிழமை
காலை 8.00 மணி(ப.நே)

D.M.I.
யாழ்நகர்

இன்னும் 50 அனுமதிகள் மட்டுமே வழங்கப்படும்.

(C/10492)

ஷண்ணின் நேற்றைய வீடியோ C.D வெளியீடு

சரத்குமாரின்

பாட்டாளி

திரை அரங்க அங்கத்தவர்கள் பிரதிகளை இன்றே பெறலாம்.

ஷண் றெக்கோடிங் ஸ்பொட்,
பெரியகடை யாழ்ப்பாணம்.

(72382)

புலமைப்பரிசில் திட்டத்தில் விண்ணப்பித்த மாணவர்களுக்கான அறிவித்தல்

மேற்படி திட்டத்தில் விண்ணப்பித்த மாணவர்களுக்கான 'இலவச அடிப் படைக் கணனிப் பயிற்சி' யானது எதிர்வரும் பெப்ரவரி மாதம் 05ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 20ஆம் திகதி வரை நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விவரங்கள் 20.01.2000 வியாழக்கிழமை அன்று புலமைப்பரிசிலுக்கான போட்டிப்பரீட்சை நடைபெறும் பரீட்சை மண்டபத்தில் வைத்து அறியத்தரப்படும்.

இயக்குநர்,
I.I.S.

100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(C/10498)

HOUSE WANTED

The Jaffna SubDelegation of the International Committee Of The Red Cross needs a house within half a mile radius from ICRC SubDelegation, Jaffna with four bed rooms, two attached bathrooms, sitting room, kitchen, garden, electricity and water facilities.

If you have a house for rent fitting those requirements, please contact immediately.

Head Of SubDelegation
ICRC
120, Temple Road,
JAFFNA.
TEL: 2026

(C/10488)

இதோ வந்துவிட்டன!

நீங்கள் எதிர்பார்த்த
மெய்கண்டான், லீலா கலண்டர்கள்
பலவித அளவுகளில் டயறிகள்

கொம்பிளிமென்ட் அடித்துக் கொடுக்கும் வகையிலான (சிறிய, பெரிய) புதிய வடிவங்களில் கலண்டர்கள், பொக்கற் கலண்டர்கள், அப்பியாசக் கொப்பி, புத்தகங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

* வியாபாரிகளுக்கு விஷேச கழிவுண்டு
உடன் நாடவேண்டிய இடம்:

மக்மிலன் புத்தகசாலை
3, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
T.P.No: 2422

(C/10474)

நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்

A/L 2002

கணிதப் பிரிவு:

| | |
|---|---|
| இணைந்த கணிதம் | : A.பத்மநாதன் |
| பௌதிகவியல் | : T.சம்பந்தன் |
| இரசாயனவியல | : N.மகேஸ்வரன் |

ஆரம்பம்: 07.01.2000
வெள்ளி 3.00 மணி

(72335)

G.A.Q. 1ST IN COM. (யாழ்., பேராதனை (வெளிவாரி)

- எமது வழமையான முதிர்ந்த விரிவுரையாளர்களுடன் பொருளியல் விரிவுரையாளர் திரு. S.வரதராஜன் இணைந்து விரிவுரையாற்றுவார்.
- A/Lஇல் 3 பாடங்கள் (கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம்) சித்தியடைந்தவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.
- பல்கலைக்கழக பதிவுகள் அனைத்தும் எம்மால் செய்து தரப்படும்.
- விவரங்களையும் விண்ணப்பப்படிவங்களையும் நேரில் பெற்றுக் கொள்ளவும்.
- இதற்குரிய விரிவுரைகள் ஆரம்பம்: 08-01-2000 (8.00 மணி)

விவரங்களுக்கு,
S.அருள்நங்கை

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்.

(72342)

இணைந்த கணிதம்
(Combined Maths)
பிரத்தியேக வகுப்பு
A/L 2002

S.இலட்சுமணன்

ஆரம்பம்:- 2000.01.07 வெள்ளி பி.ப 3.00 மணி.
இடம்:- 410, K.K.S Road, யாழ்ப்பாணம்.

பதிவுகளை 07.01.2000 திகதிக்கு முன் மேற்கொள்ளவும்.
அநுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

(C/10470)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05-01-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.